DIGITIZED
4.6
M69
115972.

உ

ஸ்ரீசற்குருவேநம:

# மச்சமுனிநாயனார்

அருளிச்செய்த

# திருமந்திரம்

## அ௦௦.

காப்பு.

ஆதிபராபரத்தாய்மலரடி
நீதியில்வேதநிறமயமானதி
சோதியில்நாதந் துலங்குஞ்சுடரொளி
சாதியில்நந்தி தன்பதங்காப்பே. க.

காப்பானநந்திகருணைபராபரங்
ப்பானகுண்டலிகுகையிலடங்கிடுந்
ப்பானபிரமன் தன்னொடுதன்பதம்
ய்ப்பாயென்னெஞ்சில்மகிழ்ந்துகொண்டேனே:

கொண்டனேமானுங்குடியாகநெஞ்சினில்
ண்டேன்மலர்ப்பதங்கருத்தாய்மனந்தனில்
சன்றேனவெளிசித்தமகிழ்ந்திட
ன்றேன் குருவம்நேரதிலேசித்தமே. ௨

த்தம்பெருகிசிவமானருத்திரன்
த்தமதாகப்பதிவாயென்னெஞ்சினில்
த்தமாய்நின்ற அருவத்திடையினில்
த்தியங்கண்டுநின்றேனதிவினூல். ௩

அறிவாமயேச்சுராமதிச்சுடரொளி
நெறியாகவந்தநேர்மையிலென்மனம்
குறியாகச்சென்றகூடிக்கசிந்துநல்
பிரியாதவாசிப்பேசின்பசித்தியே.

சித்திக்குமந்தசிவமாஞ்சதாசிவம்
முத்திக்குநல்லமோட்சமிதென்று
பத்திப்பிடித்துப்பரமாம்வெளியிலே
சுத்தமதானசுடரொளிதீபமே.

தீபமதாகச்சிவாநந்தபூரணஞ்
சாபந்தவிர்த்துத்தனையறிமந்திரம்
தாபமதாகித்துலங்கின்றவாசியில்
நீபதமாகநிலையறிபோதமே.

போதமதானபூரணவாசியில்
நாதம்நிறைந்துநன்மலர்பூத்துச்
சூதமதாகித்துலங்கும்பராசத்தி
நீதம்வளர்ந்துதிவ்வுருக்கண்டிடே.

கண்டதுவந்தக்கருணைக்கடைக்கண்
நின்றதுமேலேநிலையறிபூரணங்
கொண்டிடவந்தக்குறியினில்தீபம்
உண்டுநீபார்த்துவுயிரறிவாசியே.

வாசியுட்டுசியுந்நிறைகண்டுசெவி
தேய்வுடன்பரிசத்தேய்வுநிலையிது
தோய்வரக்கண்டுதுலங்கிடைஐம்புலன்
சேயுட்சிவமதில்சென்றிடமுத்தியே.

முத்திவளர்ந்ததுமும்மலச்சத்தியில்
பத்திநல்மனதாய்ப்பரிபூரணமாய்
சித்தம்பெருகிசிவசத்தியொன்றையும்
தித்தனருளாலறிந்துநீபார்த்திடே.



பார்த்திடக்காயம்பரமவெளியிதில்
காத்திடப்போகாக்கமலமலரினல்
சேர்த்திடுவாசிதீபச்சுடரினில்
நீத்திருந்தேகம்நிர்மலமாகுமே ௰௨

நிர்மலமாகிநேர்புருவமையும்
நன்மலரானநாதமேஞான்மணி
நன்மனதென்றதானதுவாசி
உன்மனதாமேல்பூரணிவீரோ ௰௩

அறிவானபோதம்அருளானதீபம்
நெறியானவாசிநேர்மூலவன்னி
குறியானநாதங்குருவானபோதம்
பரியானதேசிப்பறிவானமூலமே ௰௪

மூலமதானமுத்திநடுவணை
ஞாலமதாகிநடுநிலைப்பத்தி
சூலமதானசுடரதில்சென்று
சீலமதாகிசிவமதுக்கொள்ளே ௰௫

சிவமானஅகாரத்திருவானபூரணத்
தவமாய்மனதில்தானுருக்கொண்டால்
அவமானதேகமறியாச்சிவமாம்
நவமாங்கிரகம்நவம்பெறமுத்தியே ௰௬

முத்திஉகாரமுதலானசத்தியாம்
பத்தியிதனைவேபறிவாய்மனதினில்
சத்தியுமாகத்தானுருக்கொண்டால்
சித்தம்பெருகிசிவனுருவாமே ௰௭

ஆம்சிவசத்திஅருளானபோதம்
நாமயம்நீக்கிநலம்பெறப்பூசிக்கில்
வாமம்பெருகிமதிவலஞ்சென்று
நாம்சிவமல்லால்தனிச்சிவமில்லையே ௰௮

இல்லையேகள்ளம்வெகவிருதயந்
தொல்லைகளோடிச்சுழலுஞ்சுழிதனில்
சல்லைகளில்லைத்தானவனாகுந்
தில்லையில்வாழுந்திருநடமாமே ௰௯

திருநடமானசிவமானசோதியை
குருவிடமாகக்குழியினிற்கண்டு
உருவிடமென்றவுண்மையதாக
மருவிடவாசமயங்காதவாசமே ௨௰

வாசமேனும்மணிமயங்காதபூரணி
நேசமதாகநின்னருள்கண்டு
பாசமதம்இப்பதியினில்செலுத்தி
தேசமெங்குஞ்செலுத்திடுதிரமே ௨௧

திரமானதீட்சைசெப்புவேன்கேளு
கரமானநெல்லிக்கனியதுபோல
சரமானவாசிசங்கரகெவுரி
வரமானதீட்சைமகிழ்ந்திடக்கேளே ௨௨

கேளுஅம்மென்றகெடியாகமண்டலம்
நாளுடன்செயிக்கில்நமனதுவிலகுஞ்
சேலுடன்தேகந்திரமதுவாகும்
மாலுடன்சித்தம்வந்திடுந்தானே ௨௩

தானதுவொண்டாந்தீட்சையைக்கேளு
ஆனதுஉம்மென்றன்புடனியும்
வானதுநோக்கிமண்டலஞ்செயித்தால்
கோனவனருள்தான்குடியிருப்பாமே ௨௪

குடியினில்மூன்றாந்தீட்சையைக்கேளு
முடியினில்சென்றாமுழுமனதாக
அடியினில்சிம்மென்றன்புடனியும்
வடிவுடனன்றாய்வணங்கிடுமுத்தியே. ௨௫



முத்தியில்நாலாந்தீட்சையைக்கேளு
அத்தனருளையன்புடநோக்கி
உத்தமநம்மென்றுரிமையாய்ச்செயிக்கில்
சத்தஞ்சிவமாய்த்தானவனாமே. ௨௬

தானதுஅஞ்சாந்தீட்சையைக்கேளு
ஆனதுதம்மென்றன்புடனியும்
வானுட்நோக்கிமகிழ்ந்துருக்கொண்டால்
ஊனுடன்தேகம்உறுதியுமாமே. ௨௭

உறுதியாமாறாந்தீட்சையைக்கேளு
நெறிதவறாமல்நேர்மையில்நின்று
சுருதியிலங்கென்றுடர்ந்துருக்கொண்டால்
பருதிபோல்தேகம்பக்குவமாமே. ௨௮

பக்குவமேழாந்தீட்சையைக்கேளு
திக்கும்பொருளாய்த்தானேரமமென்று
சிக்குமிடந்தன்னில்சென்றுருசெயித்தால்
திக்குவிசையஞ்செய்யலுமாமே. ௨௯

செய்யவேஎட்டாந்தீட்சையைக்கேளு
பையவேயிரமபதியிடமாகிக்
கையதுநெல்லிக்கனியதுபோல
வையகந்தன்னிற்கம்மெனநில்லே. ௩௰

நில்லேநிலையில்நினைவுடனின்றால்
தொல்லைகளகலுஞ்சோதிகள்காணுந்
தில்லையில்வாழுந்தெரிசனங்காணும்
நல்லதுஅட்டசித்துகள்நன்மையே. ௩௧

நன்மையாமொன்பதாந்தீட்சையைக்கேளு
உண்மையும்மெனவேயுகந்துருக்கொண்டால்
சின்மயமானதெரிசனங்காணும்
தன்மையிதெனவேசார்ந்திடமுத்தியே. ௩௨

சார்ந்திடப்புத்தாந்தீட்சையைக்கேளு
கூர்ந்திடுமேத்தக்குருவையநீயார்த்து
ஆர்ந்திடுமம்மெஎன்றனுபினம்நோக்கில்
நேர்ந்திடும்பிறவித்திருவுருவமே ௩௫

ஆமேயுருவமதிறங்குண்டத்
தாமேபிடந்தனிச்சிவமாகும்
ஊமையுருவாயுகந்திடும்பீடித்
காமம்வினையுங்கரவன்மூலமே ௩௬

மூலையாதுமேலமூகண்டமானது
தலையாச்சடாதில்நாதம்பிறந்திடும்
மலையாதுமேதிஅண்டச்சுடரிலே
அலையாகநில்றது ஆதியுமந்தமே ௩௭

ஆதியுமந்தமும்அமர்ந்தமெண்டமாய்
வீதிகளாறுவிளங்குறுமேலை
சோதிகள்நிறைந்தது அண்டச்சுடரொளி
சாதிகள்தொண்ணூற்றாறும் சமைந்ததே. ௩௮

சமைந்ததுதன்னைச்சார்ந்துநீவுங்கேளு
அமைத்திடும்போதிலதுசெய்யுந்தன்மை
சமைத்திடுமாதார்சுழலவையாமனில்
நிமித்திடும்பொழுதில்நின்னருள்கண்டிடே ௩௯

கண்டிடுதேகங்காரணமாக
அண்டிடும்போதிலமர்த்திடும்வாழ்க்கை
சென்றிடுஞ்சிகவுஞ்செலுபமாகி
மன்றிற்சென்றமருத்துவந்தானே ௪௰

மருத்துவமென்னுவழுத்திடக்கேளு
அகத்திலறிவுஅமைந்திடும்போதில்
வருத்திடும்பதியும்வளர்பசுபாசமுந்
தொகுத்திடும்போதந்தத்தொழில்செய்குவாரே. ௪௧



வார்பொருளறிவுவளர்பதிச்சேரில்
சீர்சிவயோகசிவபதிசேர்வான்
நேர்பதியானநிர்ணயங்காண
கூர்பதிவானகுணமதுவாமே. ௪௨

ஆமேமோனவறிவுகந்தாலது
நாமெனக்கோபம்நவின்றிடுமேக்காள்
தாமெனக்கொடுமைகூணத்தினிலிலவான்
ஊமையுமோடியொளிந்திடும்பாரே. ௪௩

ஒளிந்திடும்பாசத்துள்ளறிவுகந்தால்
தெளிந்திடும்அறிவுநேராறியாமல்
களித்திடுமாய்கைசுழலதுதனிலே
கலித்திடுஞ்சிவமூங்காரணம்பாரே ௪௪

காரணமாகக்கர்மமுரைத்தோம்
நீறணிச்சடையோனிறைமதியாலே
சீரணிதேகஞ்செபவதுகண்டோர்
பேரணிமூலம்பெருமைசொல்வேனே ௪௫

பெருமைசிறந்திடும்போஞ்செழுத்தின்
உருமையின்பாகத்தன்மையைக்கேளு
சிறுமையும்வறுமையுஞ்சென்றிடுமந்த
அருமைவளம்பதியாம்பதிபாசமே ௪௬

பாசஞ்செறந்தபதியுடன்மூன்றையும்
வாசமதாகவழுத்துவோங்கேளு
தேசமாம்பதியுந்நின்னருள்சிவமாந்
தேசமாம்பசுவுஞ்சிவனுமாமே ௪௭

ஆமெனப்பாசமடக்கியதேகமாம்
நாமெனவளர்ந்தசமர்த்தைநீகேளு
சோமனைதரித்தசுந்தரன்கிருபையால்
நாமவனைநன்மைசொல்வேனே ௪௮

சொல்லுவேனந்தச்சோதியாம்பதியும்
நல்லுறவாகநயம்படநின்று
உள்ளும்புறமுமொழிக்கும்பசுபாசத்
தெள்ளிமைகண்டுதெளிவுறவுண்மையே ௪௭

உண்மையாம்பசுவும்பாசமிரண்டும்
தன்மையதாகநாடும்பதியினை
தன்மைப்பசுவும்பாசந்தனைக்காணும்
வண்மையாம்பாசம்பசுவினையறியா ௪௮

அறியாமல்பாசமறிபவேவேண்டில்
நெறியானஆசான்றேர்வமையைக்கண்டிடுங்
குறியாயவர்பதக்குணமுடல்வேண்டில்
பரியானபாசம்பசுத்தனையறியுமே ௪௯

ஆமென்பபாசம்பசுத்தனையறியில்
தாமென்பயனுந்தலைவனைக்காணும்
நாமெனத்தலைவனைநாடியேகாணில்
ஓமெனசித்தகளொருகோடிசித்தியே ௫௰

சித்திகளானதேகமுயிராப்
பத்திசெய்காணப்பதவிகள்கண்டால்
முத்தியமில்லைமோட்சமுமில்லை
சத்தியுமில்லைத்தன்மையுமில்லையே ௫௧

தன்மயமானதருவுஞ்செழுத்தின்
உண்மைகள்தன்னைபுணர்க்கிறேன்கேளு
நன்மைஅகாரம்நடுவேனந்தோன்றி
உண்மைஉகாரம்நிலைத்திடுமண்டமா ௫௨

அண்டத்திலிருந்தஅறிவோங்காரமாய்க்
கண்டத்தில்நிறைகருணைபதித்திவர்
பிண்டத்திலுறைந்தமெய்ப்பெருமையிருமேல்
நின்றத்தஅஞ்சும்நேரெழுத்தாமே ௫௩



ஆமேஅகாரமமர்ந்திடுஞ்சிவமாந்
தாமேஉகாரந்தன்னுயிராகிடும்
ஓமேஓங்காரமெழுத்ததுவுடலாம்
நாமேவகுத்துநலமுரைத்தோமே. ௫௪

உரைத்ததோர்பாதம் உண்மைவெளிப்பட
நிரைத்தகருவில் நிருணயஞ்சொல்வேன்
மறைத்ததோர்சேசகமலரினில்பூரகம்
அரைத்ததிரும்பகமமர்ந்ததுகாலே. ௫௫

காலானவாறு கருவானமூலம்
மேலானவஹ்னி மெய்யானநீயம்
பாலானஅப்பு பதிவானபூரணம்
சேலானபோதஞ் சிவயோகமாமே. ௫௬

சிவயோகம்:

சிவயோகியாக நிபர்சுடரொளித்
தவமாயிருந்து தன்விலைகண்டால்
தவமானசிகாரம் நடுவானவீடு
அவமானமில்லா அநுக்கிரகப்பாரே. ௫௭

பாரோநீவாசிகைப் பஞ்சாட்சரநிலைக்
காரோஅந்நிலையைக் கடைச்சன்றுணர்விலையிருல்
சேரோமிரமஞ் சிவபதந்தன்னிலே
கூரோவசியன குண்டலிதன்மையே. ௫௮

தன்மையதான சதுரகிரிதனில்
உண்மையாய்ச்சென்று வசந்தமேலிட்டினில்
நன்மையாமந்த நவோங்குகைதனில்
சின்மயமாயகத் திசனைக்கண்டேனே. ௫௯

கண்டேனகத்திற் கருணைதரித்திட
விண்டேல்மனந்தனில் வெகுளிகளெல்லாங்
கொண்டேன்குருவுங் குணமாய்மனந்தனில்
நின்றதோரெழுத்தும் நினைவுஞ்சொன்றோ. ௬௰

சொன்னார்கருவுஞ் சோடசமுமுதலுங்
கண்ணெறியான காரணஞ்சொல்லி
முன்னோர்கள்செய்த முறைமையுஞ்சொல்லி
வின்னாருமென்று விரித்துரைத்தாரே. ௬௧

உரைத்தார்வயித்தியம் உண்மையாம்வாதம்
நிறைத்தார்வசியம் நேரோடஞ்சனம்
மறைப்புடன்சாக்கு லைக்குமுறையும்
வாத்திடன்வாலை மவுனஞ்சொன்னாரே. ௬௨

சொன்னார்கைப்பாகஞ் சொல்லிவிறைபாகம்
பண்ணார்சணக்கின் பாகமுஞ்சொல்லி
வின்னாருமென்று வெவ்வேறடைவாமுங்
கண்ணாரச்சொல்லி கருமச்சமென்றார். ௬௩

மச்சேந்திரனே மன்பெருவாக்காய்
நிச்சயமாக நினைவையடைந்தால்
அச்சமகன்ற அருள்மாமுனியே
வைச்சபொருளை மார்க்கமாய்க்கண்டே. ௬௪

கண்டபொருளைக் காரணமாக
இன்றுநான்சொன்ன என்னூறுமந்திரம்
விண்டபொருளினில் விபரமறிந்தபேர்
அண்டமும்பிண்டமு மறிபவர்தாமே. ௬௫

அறிவாகச்சொன்ன ஆதிநிலைகண்டு
நெறியாகக்கண்டு நேர்நிலைபெற்றோர்
நிறிவார்மலைகள் தேசங்கடோறும்
குருவாய்நிறைந்த குணமறிவாரே. ௬௬

குணமாயிருந்துக் கூறினேஞ்சூத்திரம்
தனமாகக்கண்டு தானறிவோர்கள்
கனமானயோகங் கருதுவாரப்பா
இனமாஞ்சுருக்க மென்பதுப்பாரே. ௬௭



என்பதுக்காகி என்னூறுமந்திரம்
தன்பதிவாகத்தானறிவோர்கள்
முன்பதியானமுதலாநடுமனை
உன்பதிவாலவுடனறிவாலையே ௬௮

வாலைபூசை.

வாலைதன்பூசைவழுத்துவோங்கேளு
காலமேநீயுங்கால்முகஞ்சுத்திசெய்
ஞாலமாய்த்திருநீறுநயப்படப்பூசியே
சீலமாய்நீயுஞ்செபமதுசெய்யே ௬௯

செபமதுசெய்துசிவமானவிந்துவைத்
தவமதுவாகத்தன்னருள்போற்றி
நவமதுவாகலாவிமெனவே
பவமறுத்திடப்பாத்திரம்வேண்டே ௭௰

பாத்திரம்வேண்டிப்பாயவெளிதனில்
நேத்திரந்தானுநின்னருள்கொண்டு
தோத்திரம்பண்ணிசுந்தரிபூசைசெய்
மாத்திரைப்பொழுதினில்வருவாள்தன்வாலையே ௭௧

வாலையைக்கண்டுவணங்கிநீமந்திர
கலையுமாலையுங்கருத்தாய்வணங்கினால்
ஆலயமானமவனுருத்தானும்
தாலவுறுதியில்லைத்தவமதுவாமே ௭௨

தவமதுவாகசாத்துவோங்கேளு
உவமானமில்லையோங்காரவட்டத்துள்
சிவமானவிந்துவைச்சிம்மெய்ஞ்ஞானபூசைசெய்
நவமாந்திரேகம்நலச்சிவயோகமே ௭௩

யோகநிலைமையுமுஞ்சிவசத்தியே
ஆகமமாகஅறிந்துநீபூசித்தால்
தேகஞ்சிவமாய்சிவமாஞ்சிவயோகஞ்
பாகமாய்நின்றுபலிவதுசித்தியே ௭௪

சித்திவயிரவஞ் செப்புவேன் கேளு
முத்திக்குவித்தா முதலாம்வயிரவம்
பத்திக்குள்ளாகப் பாமவெளிதனில்
புத்திக்குளாமென்று புனிதமாய்நின்றிடே ௭௫

நின்றிடவயிரவம் நேரோநிர்வாணமாய்க்
கண்டிடும்போதில் கருணைபுரிந்திடு
சென்றிடுமந்த தெரிசினமாகிடும்
அண்டமதனி லமர்ந்திடமுத்தியே ௭௬

முத்திக்கொழுந் தமுனைகொண்டதியம்
பத்திப்பிடிக்கும் பதிவானவாசியை
சித்தரும்நோக்கி நேர்தினைக்கண்டால்
சித்தம்பெருகி சிவனவனாமே ௭௭

ஆமேசிவன் தானேநிர்வாண பூரணத்
தாமெனக்கண்டு நல்லருள்பத்தி
வாமமாய்நின்ற மதியையறிந்தபின்
காமனைவென்ற கதிரவனாமே ௭௮

கல்லுப்பு.

கதிரவன்முன்னே காமம்பெருகி
மதிதனைக்கண்டு மலரதுபூத்துப்
பதிதனில்வளர்ந்துப் பாரினிற்காரமாய்க்
கதிதனில்போற்றத் தன்மையினல்லவே ௭௯

கல்லமாய்நின்ற காரூபதிதான்
தன்மையினாலே சதாசிவமானார்
நன்மைபெருகி நாதமதனில்
உண்மையினாலே புகுந்திடுந்நீறே ௮௰

நீறானஅப்பு நிலையானவுப்பு
சேருகக்கூடி சிவமாகநின்று
கூறுகொண்டு மொன்றாகக்கூடிக்
காறுணகாரங் கல்லுப்புமாச்சே ௮௧



[முப்பூகுரு.]

உப்பானகல்லுவாரா பூரணம்
அப்பானவிந்து ஆதிநாமயம்
செப்பாதம்பாதஞ்சிவநாதவிந்து
முப்பாய்வழலைமுடிதனிற்காணுமே ௮௨

காணுமேவழலைக்கயிலாசபூரணந்
தோணுமேஅந்தத்தொடுகுறிப்பாலவே
வீணல்லஅந்தமெய்யானஉப்புவை
ஊறுவாய்நீக்கி அந்தப்புவேண்டுமே ௮௩

வேண்டுமோநாதமெய்யானவிந்துவும்
தாண்டுகோலானஅடியானகல்லுப்பு
ஆண்டுகொள்மூன்றுமறைந்திடும்விந்துநீர்
வேலடியனைத்துமெய்யாகவட்டிடே. ௮௪

வட்டதுபோலேவடிவாயுருச்செய்து
திட்டமாய்ரவியில்செம்மையாய்க்காய்ந்தபின்
வட்டமதோட்டில்வைத்திடும்பத்தெரு
திட்டமாய்நீதிசிவகுருவாமே. ௮௫

குருவானமுப்பூக்கூட்டிமுடித்திட
திருவானமாதுசெய்வதுஉண்டாம்
உருவாம்அருவதாம்ஒடிஒடுங்கிடுந்
தருவானவைப்புச்சரக்குசொல்வேனே. ௮௬

[சினைவைப்பு]

சொல்லுவேன்சினைத்தொடுகுறிப்பால
நல்லுறவாமுப்புங்கல்லுப்பொன்றும்
அல்லும்பகச்சாறுந்தயிர்விட்டுப்
பல்லுறவாகப்பாண்டத்திலூடே. ௮௭

மூடியேசீலைமண்மூழுதுமேபூசி
நாடியேயாவின்பதிதனிலாக்கி
கூடியமண்டலங்குறிப்பாகவைத்து
தேடியெடுக்கச்சினைறுமாச்சே. ௮௮

ஆச்சடாசிலைமதிருடன் வைப்பு
நீச்சடாசொல்வோந்திளைவுடன் கேளு
பேச்சடாசிலைம்வெடியுடன் ரெண்டும்
பாச்சடாமூலம்பதிவுடன் சேரே: ௮௯
சேர்த்தேயிடித்துச்சிதைப்பரம்புட்டி
பார்த்தேயிடித்துப்பாண்டமதிட்டு
காத்தேமண்டலங்கருவாகப்பூமியில்
ஆத்திநீயெடுக்கஆலாத்தியாமே. ௯௰
ஆமேநல்லுப்புங்கல்லுப்புமொன்றுந்
தாமேபடிகந்தன்னோடுஅண்டம்
நாமெனவுழுந்துநல்மனிக்குண்டும்
வாமெனமாவாய்வகையுடனிடியே ௯௧

[வெண்காரம்.]

இடித்துடன்பால்வார்த்தியல்புடன் கிண்டித்
தொடுத்துடன்பானையில்தோன்றியேமூடிக்
கடுத்துடன்மண்டலங்காத்துநீவாங்க
விடுத்தவெண்காரம்விளைவிதுவாமே. ௯௨

[சாரம்.]

விளைவானசாரம்விபரமதுகேள்
தளைவாமதுநீர்தன்னோடுநீறும்
வளைவாமமுரிமதகரிநீறுங்
குளைவாயொன்றாகக்கூட்டிநீசேரே. ௯௩
சேர்ப்பதுவெடியுஞ்சிவமானகல்லுமும்
கோத்திரோடேகுருமுறைத்து
கார்த்திமண்டலங்கருவாய்ப்புதைத்தபின்
சார்த்திடுஞ்சாரக்குச்சாரமதாமே. ௯௪

[அருகு.]

சாரமாந்அருகுதன்னோடுமுறைமைகேள்
காரமதானகல்லுப்புதன்னிலே
வீரமாமூலவினையுடன்சேர்த்துப்
பாரமாந்தயிரும்பழமுடனிரே. ௯௫



நீருடனுப்புநிலையுடன் கூடிப்
பாருடன்செப்புப்பாத்திரந்தன்னிலே
நீருடன்சேர்த்துநிலைவுடன்மண்டலம்
வாருடனெடுக்கவகையுடனருகே. ௯௬

அருகுபாஷாணம்.

அருகுபாஷாணஞ்சொல்வதுகேளு
பரிசுடன்வெடியும்பச்சையுஞ்சிலமும்
நெறியுடன்சரியாய்நேர்த்ததுகுருதங்
குறியுடனொன்றாய்க்கூட்டிநீசேரே ௯௭
சேர்த்துப்பொடித்துத்திமிரக்கருவிடு
பார்த்துநீபன்றிநெய்யதுகூட்டி
வார்த்துப்பிசைந்துவட்டகைதனிலிடு
யாத்துருவட்டகைமயங்காதேபூரமே ௯௮
பூரத்திலேபொடியுமுடியும்
வாறொப்பாய்செய்துவைத்திடுமருந்தில்
நேரொப்பாய்மூடிநேருடனெடுத்திட
பாரொத்தக்கட்டிப்பாஷாணமாமே ௯௯

கெவுரி.

ஆமேகெவுரிஅதினுடமுறைமைகேள்
தாமேவெடியுந்தன்னோடுநாகமும்
வாமெனருதம்வகையுடன்தாரமும்
சாமேபொடித்துத்தான்பன்றிநெய்யே. ௱
நெய்யுடன்மஞ்சள்கருவுடன்கிண்ணியில்
பையவேவைத்துப்பதிவாகமூடி
துய்யவேதீயில்சுழலவெரித்திட
அய்யனேமஞ்சள்கெவுரியாங்காணே. ௱௧

வீரம்.

காணவேவீரங்கருவுடல்சொல்லுவேன்
ஈனமும்வெடியுஞ்சிறந்திடுஞ்சாரமும்
பேணவேகல்லுப்புமிலமானஇந்துப்பும்
தோணவேஅருகுந்துகைசரிகூட்டிடே ௱௨

கூட்டிச்சரியிடைக்குருவாம்ரசமதை
மாட்டிப்பொடித்துமறவாயதையெடு
நாட்டியேகாசிக்குப்பிநடுவினில்
ஊட்டிமேல்சீலையொன்பதுசெய்திடே ௱௩

செய்திடுபொன்டத்தியல்பாய்மணைவிட்டு
கொய்திடுகுப்பிக்குள்ளமைத்தந்தின்மேல்
மொய்திடுமணலைமூக்களவாயிடு
எய்திடுஅனலையெரித்திடுசாமமே ௱௪

சாமமெரித்துத்தண்மையாய்க்குளிர்ந்தபின்
ஓமெனக்குப்பியையுடைத்துக்கருவெடு
தாமெனக்கருவில்தன்னொடுஆறியும்
வாமென்னப்பாலையும்வாளனன்பேதியோ ௱௫

பேதிக்கவொன்றாய்ப்பெருக்கப்பொடித்திடு
வாதிக்கக்குப்பியில்வைத்துமுன்போலெரி
சாதிக்கஆறுசாமமெரித்தபின்
ஆதிக்கவீரமசையாதுவீரமே ௱௬

வீரமேசெய்யவேண்டினார்சித்தர்கள்
பாரமென்றெண்ணிப்பாடினார்முன்பின்றாய்
சாரமாய்க்கொங்கணர்சாத்தினார்வீரமும்
ஆருமறியார்வன்பாடல்முத்தியே ௱௭

முத்தியாமச்சமுனிபாடலென்னூறும்
சித்தியாய்ப்பார்த்துத்தேறினன்கொங்கணன்
பத்தியுமுத்தியும்பார்த்துபதவியில்
சித்தம்பெருகிசிலம்புகண்டாரே ௱௮

கண்டதென்னூற்றுக்கருவானமந்திரங்
கொண்டவர்மனதில்குருமொழியாக
விண்டிடட்போகாவின்னிடிதான்விழும்
சண்டனுக்கினாயாய்த்தான்மாளுவானே ௱௯



மாளுவான்வெவ்வினைமயக்கந்தன்னில்
ஆளுவான்மூடனைவனுறவாகக்
கோளுங்குடிலமுங்கூறுவான்மூடர்கள்
காலநிலையறியாக்கதைகள்சொல்வானே ௱௰

சொல்லுவார்மூடர்துகளறமாட்டார்
நல்லவர்போலநல்மொழிகூறி
கொல்லுவானுயிரைக்கூத்துவம்போலே
தொல்லைகள்செய்துசுழலுவான்பாரே ௱௰௧

பாரதன்னுயிர்போல்பண்புடன்பாரார்
ஈரமற்றவர்போலிறைச்சிகள்தின்பார்
சாரமற்றவர்போல்சாதிப்பான்பூசையில்
நேருற்றநூலைநிலையறியார்களே ௱௰௨

நிலையாதிருளில்நின்னருளென்று
வலையானமாய்கையில்மயங்கித்தவித்துத்
தலையாச்சுழிமைத்துருவமதென்று
கலையானவாசியைக்கழிப்பான்கசடனே ௱௰௩

கசடனறவைக்காட்டுகிறேன்மைந்தா
நிசமாய்ப்பிரமம்நிலையிதுவென்று
நிசமாஞ்சுழியைக்கிருபையால்காட்டி
நிசமாயிதுவெனச்செப்புவான்பாரே ௱௰௪

பாரில்மாந்தர்பலவிதமாகக்
கூறுடன்சொல்விகுலைவலிப்பான்
நேருடன்நிலையும்நிலையுடவழியுஞ்
சீருடன்மூலச்செயலறியானே ௱௰௫

அறியானபுருவமதினடுநடுவம்
குறியானவாசிக்குணமதறியான்
உருவானகாயத்துள்ளைம்பெருவெளி
திருவானமூலஞ்செயலிதுவாமே ௱௰௬

செயலிதுவானசித்திராடி
நயமுடன்சொல்வேனிம்முறைதனில்
சுயமுடன்மூலச்சுடராநேரய்ந்தி
இயல்புடன்பிடரியிலெய்திடும்பாரே ௱௰௭

பாரேபிடரியதிவாம்பிடரியில்
நேரகத்திசேர்நிலையதுவாகும்
சாரதில்பிரமந்தன்மெஞ்ஞொளியாகும்
பாரதில்நீயும்பரிபூரணமே ௱௰௮

பூரணமாம்பரிபூரணந்தன்னை
கார்புருவமையங்கருணைபெருவெளிப்
பார்குருநாதம்பரவெளியதனில்
சாரதில்தீபந்தன்னொளிகாணே ௱௰௯

[லிங்கவைப்பு]

தானானலிங்கந்தன்மையைக்கேளு
கோனானதாங்குருவங்கம்போலும்
ஊனானதொன்றாய்உடன்சேரதில்குரு
தேனானசினஞ்சேரதில்பாதியே ௱௨௰

பாதியைச்சேர்த்துப்பதிவாய்ப்பொடிசெய்து
ஆதியாங்குப்பியிலதிலிட்டெரித்திடே
நீதியாய்சாமம்நினைவாயெரித்திட
சோதிபோலிங்குசுந்தரமாமே ௱௨௧

சுந்தரமாகித்துலங்குமென்றாலும்
மந்திரந்தன்னைமகத்தானகொங்கணர்
தந்திரமாகத்தன்மனம்நோக்கி
அந்தரந்தன்னிலாதிகண்டாரே ௱௨௨

ஆதிசாத்திரமறைபத்திநூலும்
வாதிகள்மெச்சவைத்தனர்கொங்கணர்
நீதிகளோடேநினைவையறிந்தால்
சோதித்திருவத்துலங்குவதிலே ௱௨௩



[சிங்கிவைப்பு]

துலங்கியசிங்கித்துலங்குவேல்கேளு
நிலங்கருநாகம்நீர்வெடியுப்பு
இலங்குறுகுதமுப்பினமுங்கூட்டி
பலங்கருவாகப்பதியுடன்பொடியே ௱௨௪

பொடிதனைக்குகையில்பொருந்தவேயிட்டு
அடிதனில்துளையிட்டதின்கீழ்க்குகைவைத்
திடமுடன்புடமதில்சென்றுருகி
வடித்திடும்படியில்குகையினில்தானே ௱௨௫

தானதுவெடுத்துத்தன்மையாய்ப்பார்த்தால்
தேனதிவிறமாய்சிங்கியுமாகும்
ஆனதோர்சிங்கிஆதிசாக்கு
கோனவனருளால்குருமுறையாமே ௱௨௬

[பூரவைப்பு]

முறையானபூரமுடிக்கும்வகைகேள்
நிறையானபூரம்நேர்வெடிசினம்
கறையான்காரமுங்கனக்குச்சரியாய்
துறையாகக்கூட்டித்தோளஅரைத்திடே ௱௨௭

அரைத்திடுசந்தனக்கிழாயந்தனிலே
கரைத்திடுகூழ்போல்கலசந்தனிலிடு
நிறைத்தவால்மிளகுப்பொடியதில்சேர்த்து ௱௨௮
திரத்துடன்பூமியில்செருமண்டலமே

மண்டலஞ்சென்றவகையுடனெடுத்தால்
கொண்டிடும்பூரங்குருவாகநிற்கும்
அண்டர்கள்மெச்சுமாதிசாக்கிது
தொண்டர்கள்செய்யுந்துறையிதுவாமே ௱௨௯

[சாம்பிராணிவைப்பு]

ஆமேசாம்பிராணிஅதினுடைமுறைமைகேள்
தாமேகுங்கிலியந்தன்னோடக்கும்
வாமெனக்கருவாய்ப்பட்டையுங்கூட்டி
நாமெனஇடித்துநன்றாய்ப்பொடித்திடே ௱௩௰

பொடிதனையெடுத்துப்போட்டிடும்பானையில்
அடியுடனெய்யிலமர்த்திப்பிசைந்திடு
வடிவுடனடுப்பில்வைத்துஎடுத்திடு
படிவுடனுருகும்பதந்தன்னைப்பார்த்திடே ௩௰௧

பார்த்திருந்தானபதிவாயுருகிடில்
மாத்திடும்பாயில்வளம்பெறச்சுண்டிடும்
பேர்த்திடுங்கட்டிபிலமாயிறுகிடும்
சார்த்திடும்பெருசாம்பிராணிதானே ௩௰௨

[நாகவைப்பு]

தானென்றநாகத்தன்மையைக்கேளு
கானென்றவெள்ளிக்காரியஞ்சூதங்
கோனென்றமூன்றுங்குணமாயுருக்கிநீ
பானென்றகலவம்பதமாய்ப்பொடித்திடே ௩௰௩

பொடித்திடுமருந்துபோடும்விதங்கேள்
தடித்திடும்வெடியுந்தாளகங்கெந்தியும்
அடித்துடன்பொடித்துஅமைத்திடுகுகையினில்
நொடித்திடஅடுப்பில்நோக்கியெரித்திடே ௩௰௪

எரித்திடும்போதில்இதமாயுருகிடும்
குரித்துவுருகுங்குழம்பதுதன்னை
வரித்திடுமச்சில்வார்த்திடுகண்விழுந்
தரித்திரமேதுதன்னுகஞ்சித்தியே ௩௰௫

சித்திக்குமத்தசெயமாமென்னூறாம்
முத்திக்குநல்லமோட்சமதாமே
புத்திக்குள்நின்றபொருளதுதோன்றுஞ்
சத்தியமாகத்தன்னருள்காரே ௩௰௬

கார்ப்பதுமென்னூற்கண்மணிபோலே
பார்ப்பதுபதனம்பதனமதாக
சேர்ப்பதுகுகையில்திரமுடன்வைத்து
கூர்ப்புடனீயுங்குருவென்னக்காரோ ௩௰௭



காருநிந்நூலைக் கசடருக்கியா
நேரானைப்பார்த்து நிலைபதிவார்க்கி
யாரவரானிலு மமர்ந்துநீபேசு
சார்வதுபிடரித் தன்சுழிமுனையே. ௩௰௮

முனையினில்தீப முச்சுடராகும்
மனைதனைக்கண்டு மகிழ்ந்துநீபாரு
சுனையினில்நின்ற துருவத்திலேற்றி
அனைதனில்நின்று அருளதுகாரே. ௩௰௯

கார்வங்கம்.

கார்வங்காசிதங் கருத்துடன்கேளு
வேர்வங்காரமும் வடியுடன்தாளகம்
நேருடனொன்றாய் நிமித்திப்பொடிசெய்து
பாரந்தக்குகையில் பதித்துஎரித்திடே. ௪௰

எரித்திடும்போது விளங்கியிறுகிடும்
பதித்திடுவங்க ரசிதமென்றுங்
குறித்திடுஞ்சித்தர் கூட்டுவகையிது
விரித்தபொருளின் விபரமிதாமே. ௪௰௧

தாமெனவெள்ளி ரசிதமிதுகேள்
நாமுனவின்ற நல்வெள்ளிரசமும்
ஓமெனகெந்தி ஒளிர்வங்கந்தாளகம்
ஆமெனக்கூட்டி அமிழ்த்துப்பொடித்திடே. ௪௰௨

பொடிதனைக்குகையில் போதரவாயிடு
அடிதனில்தீயை அழுத்தியெரித்திடப்
படிதனிலுருகிப் பக்குவமாகுந்
திடமுடனூறிச் செம்மையதாமே. ௪௰௩

ரசிதம்.

ஆமெனவெள்ளி அமர்த்திடும்ரசிதத்
தாமெனக்காணத் தன்னருள்வேணும்
நாமெனுநிலையும் நடுநிலைப்பார்த்தால்
ஓமெனவந்த வுண்மையிதாமே. ௪௰௪

இங்குகாயம்.

உண்மையாயிங்கு வுரைக்கிறேன்கேளு
நன்மையாஉள்ளி நயமுடன்கபிருகு
செம்மையாய்க்கூட்டி சேர்த்தவுண்மைபோல்
உண்மையாய்வெய்யிலில் உலரவைத்திடே. ௪௫

உலர்ந்திடும்வெப்பம் பட்டைத்தயிலம்
நலந்திகழாக நயமாயெடுத்திடு
செலந்தனில்சாக்கைச் சேர்த்ததுப்பிசைந்திடு
குலத்தனிலாகிக் கூட்டியுருட்டிடே. ௪௬

உருட்டியேயிங்கான் தாழியில்சேர்த்திடு
இருட்டினில்மண்டலம் இருந்திடயெடுத்திடக்
கருத்துடன்சமைத்து காரணமாகித்
திருத்தமாய்க்காயஞ் செம்மையாய்விடுமே. ௪௭

விசுமேகாயம் வீறுகளேதிக்
கூசுமேநாசிக் குமுறவெரித்திடும்
வாசிகள்விறை வாங்கித்தகட்டிடுந்
தேசுகளான தேகவுறுதியே. ௪௮

உறுதிகள்சொன்றேம் உவமைஎன்னாளும்
நெறியுடன்பார்த்து நேர்நிலைபெற்றோர்
கருவுடன்குருவுங் காரணமாகத்
திருவருள்பெற்ற சித்தருமாமே. ௪௯

தொட்டிவைப்பு.

சித்தாந்தொட்டி செப்புவேன்கேளு
பெத்திடும்வங்கம் போரதுவொண்டும்
சுத்திரசமுஞ் சுகமுடன்கூட்டி
சந்தமுங்கெந்தியுந் தாளகஞ்சேரே. ௫௰

சேர்த்திடுந்தருகஞ் செம்மையாயேழும்
பார்த்தொருநிறையாய்ப் படியப்பொடித்திடு
வார்த்திடுகுகையில் வளமாயெரித்திடப்
பார்த்திடத்தொட்டிப் பாஷாணமானதே. ௫௧



ஆமெனஎன்னூறடிமுடிபார்த்தால்
தாமென்றேதான் றந்தன்மைவெளிப்படும்
வாமெனஅந்தமதியாமமூர்த்தமும்
ஓமெனமூலமொளிதருந்தீபமே ௫௨

தீபமதானசிவசத்திரூபமும்
தீபமாய்நின்றதேகமுஞ்சித்திபாம்
தீபத்தில்மூலஞ்செல்திடவாசியாம்
தீபஞ்சிவமாய்செல்திடும்யோகமே ௫௩

யோகத்துக்காதியென்றனஅட்சரம்
தேகத்துக்காதிசிவசத்திமூலமாம்
யோகத்துக்காதியென்னென்றுசொல்லுவேன்
தாகத்துக்காதிதயவிரதிகமே ௫௪

[வெடியுப்பு]

அதிகசரக்குஆதியிலவணம்
மதியானஊசரம்வடித்தநீர்காய்ச்சி
நிதியானசம்பநீரதைத்தாக்கிடில்
விதியானகம்பிவெடியுப்பமாச்சே ௫௫

உப்பானபூநீறதாக்கும்வகைகேள்
வெப்பாஞ்சவுடுவேணபடியெடு
அப்பினில்போட்டுஅலைபக்கமாத்தலைத்
கொப்பமாய்ரவியில்கூர்மையாய்க்காய்ச்சிடே ௫௬

காய்ச்சிடப்பூவங்கருவானபூநீறும்
மாச்சிடப்பூநீர்வளமாசரக்குக்கும்
பாச்சிடதந்தப்பதிவாகக்கட்டுமென்றும்
மூச்சடப்போகாமுனையானதியென்னே ௫௭

[பூநீர்சவுக்காரம்]

தீபசவுக்காரஞ்செப்புவேன்கேளு
மாயாதிபூநீர்வளர்வேடிகாரமும்
தோய்வடிநீரில்கண்டிடக்காய்ச்ச
வாயுறஎன்னெவழித்துவுருட்டிடே ௫௮

உருட்டியகாரம்ஓம்சவுக்காரமாம்
மருட்டிடுஞ்சரக்கைவாட்டியெரித்திடு
திருட்டுகள்பேசித்திரியுமவாதியை
வெருட்டுமிக்காரம்வேதைகள்கோடியே ௱௫௯

[சாரலவணம்]

கொடியானசாரலவணமதுகேள்
நெடியானபூநீறும்நேர்கரியுப்பு
படியானதேசியில்பதமாயெரித்திட
மடியாதசாரலவணமிதாமே ௱௬௰

சத்திசாரம்.

தாமெனச்சத்திசாரமதுகேள்
நாமெனநீரில்நல்வெடிச்சாரமும்
ஆமெனப்பூவுமதுகரியுப்புடன்
சாமெனக்காச்சசத்திநல்சாரமே ௱௬௧

வெவாச்சாரம்

சாரமாமெவாச்சாரமதுகேள்
காரமாம்வெடியுங்கல்லுநீருப்புடன்
பாருடன்பூவும்பதமாய்அமுரியில்
நேருடன்காச்சநிசமெவாச்சாரமே ௱௬௨

காசிச்சாரம்.

நிசமானக்காசிச்சாரமதுகேள்
வசமானபூநீர்வளர்வெடிநீருப்பு
நிசமானவெவாச்சாரமுங்கூட்டியே
பசமானதேசியில்பதமாயெரித்திடே ௱௬௩
எரித்திடக்காசியிதமானசாரமாங்
குறித்தசரக்கைகுணமாக்கட்டுமினும்
விரித்தசடையன்வேதாந்தசாரத்தைத்
தரித்தவன்னாயில்தானவனென்கே ௱௬௪

[ஏகபடிச்சாரம்] தானுனஏகச்சாரமதுகேள்
வானும்வெடியும்வளமானகல்லுங்
கோனுமமுரிக்கொடியநீருப்புடன்
தேனுனகாசிசாரமுஞ்சேர்த்திடே ௱௬௫



சேர்த்திடுஆனைச்செவியிதனல்லிலே
பார்த்துக்கனாத்துப்பதமாயெரித்திடப்
பூத்துப்பொலிந்துபொன்றிப்பசுண்டிடும்
ஏத்திடுஞ்சரக்குயேகபடிச்சாரமே ௱௬௬

சீனலவணம்

சாரமாய்சீனம்லவணமதுகேள்
வாரமாம்பூநீர்வளர்கல்லுநீருப்பு
காரமாம்வெடிசரிக்காடியில்லெரித்திட
பாரமாஞ்சீனலவணமிதாமே ௱௬௭

கெந்திலவணம்

தாமெனகெந்திலவணமதுகேள்
ஆமெனவெடியுமதிலுடசாரமும்
நாமெனவுப்பும்நலமானசீனமும்
வாமெனஅமுரியில்வளமாயெரித்திடே ௱௬௮
எரித்திடவுப்புயிதுகிச்சிவந்திடுந்
தரித்ததோர்கெந்திலவணமிதப்பாற்
குறித்ததோர்சரமுங்குணமாயிறுகிடு
மரித்தரசமுமகத்தானசித்தியே ௱௬௯

இந்துப்பு

சித்திக்கவேண்டியேசெப்புவேனிந்துப்பு
முத்திக்குச்சினமுமுதலானகல்லுப்பும்
வெத்திவெடியுடன்மேலானசாரமும்
சுத்தநீருப்புடன்சுகமாகக்கூட்டியே ௱௭௰
கூட்டியேதேசிஆவின்நீர்தன்னோடு
ஆட்டிக்கரைத்தானபின்னெரித்திட
நீட்டிபெரித்துநிறைவாயிறக்கையில்
நாட்டியேபூநீர்நலமாயரையிடே ௱௭௧
அரையிட்டுமூடிஅனலில்வெதும்பிட
இரையிட்டவாய்மையிறக்குமித்துப்புவாம்
துறையிட்டநோயைத்துரத்தும்ஒழிக்கும்
நிறையிட்டமாறுநிர்ணயமாகுமே ௱௭௨

சிந்துலவணம்

ஆருமேசிந்துலவணம்
வாகுடன்சொல்வோமதிந்திரமேநீ
பாகுடன்சாரம்படிகமாகுமினம்
தாகமாம்வெடியுந்தனிப்புவழலையே ௱௭௩
வழலையோடொன்றாய்வாகுடன்கூட்டி
நிழலைக்கண்டடுக்கிநீரதிற்கரைத்து
சுழல்படாமல்கண்டடெரித்திட
நிலையொத்தசிந்துலவணமிதாமே ௱௭௪

அட்டுப்பு

ஆமேயட்டுப்புஅன்புடன்சொல்வோம்
நாமெனபூநீர்தனிவெடியினம்
நாமெனச்சாரநலமானஇந்துப்பும்
காமல்தனீரில்கரைத்தெரித்திடே ௱௭௫
எரித்திடும்போதுஇயல்பதங்கண்டு
குதித்ததற்சட்டியில்குணமாயிறக்கிடு
கரித்துடனேவிச்சுழன்றதுகட்டியாம்
அரித்துடனுப்புஅட்டுப்புமாமே ௱௭௬

கல்லுப்பு

ஆமேகல்லுப்புஅன்புடன்சொல்வோம்
தாமேநீருப்புத்தன்மேருசாரமும்
நாமேவெடியும்நல்லானபூநீறும்
வாமமாந்தேசியில்மயங்கவெரித்திடே ௱௭௭
மயங்கவெரித்துவளமாகச்சுற்றினால்
தயங்கியேயப்புக்கானங்கேகட்டிடுஞ்
செயங்கொண்டவுப்புதிருவானகல்லுப்பு
நயங்கொள்ளப்பார்த்தால்நாட்டத்தகற்காணுமே ( )

கூடலுப்பு

நாட்டமாங்கூடலமானஉப்புகேள்
தாட்டிகமாய்வெடித்தன்மேருசினமும்
காட்டிடசாரங்கூடகல்லுப்புடன்
ஆட்டியபூநீறினிலடைக்கூட்டிடே ௱௭௯



கூட்டிப்பொடித்துக்குருவானவானீர்
நாட்டிக்கரைத்துநலமாயெரித்திட
பூட்டியவுப்பதுநலமையாய்க்கட்டியே
சூட்டிவெடிக்கச்சூடனுப்பானதே ௱௮௰

[சவுட்டுப்பு]

உப்பானசவுட்டுப்புவுறவாமுறைகேள்
அப்பானபூநீறதிலிந்துகாரமும்
வெப்பாம்வெடியும்வெண்ணிச்சாரமும்
செப்பமுடனேதேசியினிரிடே ௱௮௧
தேசியினீரில்சிறக்கக்கரைத்துமின்
மாசில்லாமல்வைத்தெரித்திட
தேசமாய்வற்றிநின்றதோருப்பது
வாசந்நிறைந்தவளர்சவுட்டுப்பதே ௱௮௨

[உப்புக்கட்டு]

உப்பில்கட்டுப்புவகைத்துநான்சொல்வேன்
செப்புங்கறியுப்புசேரும்வெடியுப்பு
கொப்பானசினங்கொடியநவச்சாரம்
அப்பானநீரிலடங்கக்கரைத்திடே ௱௮௩
கரைத்திட்டுப்பில்கனலிட்டெரித்திட
விரைத்தவுப்புவெண்மையாய்க்கட்டுமென்றாம்
நிரைத்திட்டமாகநின்றதோருப்பது
வரைத்திடப்போகாஉண்மைகட்டுப்பதே ௱௮௪
உண்மையாய்க்காரசாரமுறைத்திட்டோம்
நன்மையாய்ப்பார்த்துநடுநிலைபத்தினால்
உண்மைபெருகியோடுந்துறைக்கெல்லாத்
தன்மையாய்க்காரசாரமுறையிதே ௱௮௫

[வைப்புப்பாஷாணம்]

முறையானவைப்புப்பாஷாணஞ்சொல்லுவேன்
நிறையாகக்கண்டுநீயருள்பெற்றால்
இறையானவைப்புத்துலக்குமெய்ஞானதில்
வரையாஞ்சரக்குவைப்புச்சொல்வேன் ௱௮௬

[தொட்டிப்பாஷாணம்]

சொல்லுவேன்தொட்டிப்பாஷாணந்தன்னை
வெள்ளிகாரீயம்வெண்சாரநாகமும்
துள்ளியரசமுந்தோய்வாகக்கூட்டியே
தெள்ளியதுருசுஞ்செயசாரங்கூட்டிடே ௱௮௭
கூட்டிப்பொடித்துக்குகைதனிலுருக்கிட
நாட்டியதொட்டிநலப்பாஷாணமாம்
பூட்டியபூட்ட்ப்[illegible]க்குருவாகும்
நாட்டிகமானசமத்தைஅறிந்திடே ௱௮௮

[செம்புத்தொட்டி]

அறிவானசெம்புத்தொட்டியதைக்கேளு
நெறியானநாகமும்நேரசவங்கமும்
குறியானலிங்கமுந்தாளகங்கூட்டியே
சரியாய்ப்பொடித்துச்சாத்திரக்குகையிலே ௱௮௯
குகையையெடுத்துக்கூர்மையாய்க்காச்சிட
உகையுடன்சேர்த்துவளமாயிறுகிடும்
நகையுடன்குகையில்தானதுபார்க்கத்
தகையுடன்செப்புத்தொட்டியுமாமே ௱௯௰

[அயத்தொட்டி]

ஆமேஅயத்தொட்டிஅன்புடன்சொல்லுவேன்
தாமேவங்கமுந்தங்கநீநாகமும்
நாமெனச்சூதமும்நல்லதோர்கெந்தியும்
ஓமெனலிங்கமும்உடன்தாரங்கூட்டியே ௱௯௧
தாரமுடனேசாக்கைப்பொடித்திட்டுக்
காரமாய்க்குகையில்கட்டியுருக்கிட
சாரமாயுருகித்தன்னிலடங்கிடும்
வாரமாமயத்தொட்டியுமாமே ௱௯௨

[புத்துத்தொட்டி]

ஆறுமேபுத்துத்தொட்டியதைக்கேள்
நாகம்வெள்வங்கமும்நயமானலிங்கமும்
பாகுடன்தாளகம்பதிவாம்வெடியுப்பு
வாகுடன்கூட்டிவகையாய்ப்பொடித்திடே ௱௯௩



பொடித்தபொடியைப்பேர்துவாங்குகையினில்
வடித்தஅனலில்வாகுடனுருகினால்
அடுத்துஇறகிஅன்புடன்கட்டுமே
தொடுத்ததோர்புத்துத்தொட்டியிதாச்சே ௱௯௪

[ரத்தசிங்கி]

ஆச்சென்றுரத்தசிங்கியைக்கேளு
வாச்சிடுதுருசும்வளமானகெந்தியும்
மூச்செனத்தாரமுடிவானலிங்கம்
காச்செனக்காரங்கண்டிடைத்தூக்கிடே ௱௯௫
தூக்கிப்பொடித்துத்துருவானசெம்பினில்
தாக்கியேமூடித்தனலிட்டெரித்திட
பாக்கியம்போலேபதிவாயுருக்கியே
சீக்கிரமிரத்தச்சிங்கியுமாமே ௱௯௬

[எமசிங்கி]

சிங்கியாமேமசிங்கியைக்கேளு
தங்கியதாரந்தன்னோடுலிங்கம்
பொங்கியகெந்திப்பொலிவானதுருசு
மங்கியகார்நாகம்வளரக்கூட்டிடே ௱௯௭
கூட்டிப்பொடித்துக்குருவாகச்செம்பினில்
நாட்டியேமூடிநயமாயெரித்திட
ஆட்டியமருந்துஅடைவாயுருகியே
பூட்டியஎமம்பொலிவானசிங்கியே ௱௯௮

[ரசிதசிங்கி.]

பொலிவாமிரசிதம்பொங்கியசிங்கிகேள்
மலிவானதாரம்வளர்வீரத்தமும்
தெளிவாமனோசிலைசிங்கியும்வெள்ளையம்
ஒளிவானபூவுமொன்றாய்ப்பொடித்திடே ௱௯௯
ஒன்றாய்ப்பொடித்துவுருவானவெங்கலம்
நன்றானசெப்பினில்நயமாகமூடியே
குன்றாததீயில்குணமாயெரித்திடப்
பன்றுமிரசிதசிங்கியைப்பார்த்திடே. உ௱

[பாஷாணம்]

பாருநீஉருகையில்பாஷாணந்தன்னையே
சீர்பெருங்கெந்திதிருவாமனேசிலை
கார்பெறுதாரங்களத்தபாஷாணமும்
ஏர்பெறுந்துருசுவைகாந்தவீரமே ௨௱௧

வீரத்துடனேவிளங்கியநாகமும்
பாருந்திரசமும்பதிவாய்ப்பொடிசெய்து
நேரொத்தக்குடவனைந்தச்சிமிழிலே
சீரொத்தவைத்துசிக்கெனமூடியே ௨௱௨

மூடியேமுழக்கில்முக்கியப்புடமிடு
வாடியுருகிவெள்ளையாய்க்கட்டும்பார்
நாடியெடுக்கநலமணியாகவே
பாடிநீமுதியிலாப்பாஷாணமாகுமே ௨௱௩

[கார்முகில்பாஷாணம்]

ஆதிமேகார்முகிலப்பனேசொல்லுவேன்
நாகமும்வீரமும்நல்லபாஷாணமும்
பாருடன்லிங்கமும்பச்சையுங்கூட்டியே
வாருடன்தாரமும்வரிசையாய்க்கூட்டிடே ௨௱௪

கூட்டிப்பொடித்துக்குகையாமயச்செப்பில்
நாட்டிபேரூழிநயமாம்புடந்தனில்
வாட்டியெடுக்கவளமாயுருகியே
ஆட்டியகார்முகிலதிகபாஷாணமே ௨௱௫

[பாஷாணலிங்கம்]

பாஷாணலிங்கம்பகருவேன்மக்களே
கூசாமல்வீரந்துருவாமனேசிலை
பேசாதவங்கம்பெரிதானகெந்தகம்
தேசானதுருசுஅதில்ரசங்கூட்டிடே ௨௱௬

கூட்டிப்பொடித்துக்குப்பியில்தாக்கியே
ஆட்டிமண்சிலைதந்தனைதாக்கிடு
திட்டியசாதியில்செம்மிமணலிட்டு
மட்டிடுநீயவளரஞ்சசாமமே ௨௱௭



சாமமெரிக்கத்தானேதுப்பியில்
ஏமநிறம்போலிருக்குநல்லிங்கமும்
தாமதமில்லை சதகோடிவேதையாம்
காமனைவென்றக் கருணைக்கண்பார்த்திடே. ௨௱௮

வெள்ளைபாஷாணம்.

பார்த்திடுவெள்ளைப் பாஷாணந்தன்னையே
நீத்திடும்வெள்ளை நேரசதாலகஞ்
சாத்திடும்வீரஞ் சதிராம்வெடியுப்பு
ஆக்கிடுமொன்றாயரைத்துப்பொடித்திடே. ௨௱௯

பொடிதனைக்குப்பியில் போட்டுமண்சீலைசெய்
வடிவுள்ளதாழியில் வைத்துமணலிடு
சடுதியாய்த் தீயதுநாக்கிறல்சாமமும்
முடிவாகக்காய்ந்தால் முத்துபோல்கட்டுமே. ௨௱௰

கட்டியிறுகிக்கனத்தபாஷாணமுந்
திட்டமாய்க்குப்பியில் சேர்த்துஇறுகிடும்
வட்டமதிபென வளர்கயிலாசமும்
கிட்டநின்றேயதிற் கிருபையாமதியே. ௨௱௰௧

ஆதியாம்வெள்ளை பதிந்தவன்சித்தனும்
சோதியில்நாதந் துலங்குமவனிடம்
நீதியில்நியம் நேர்நிலையாகிநின்
சோதிஞானக் குருவருளாமே. ௨௱௰௨

கெவுரி.

குருவாங்கெவுரி கட்டும்வகைகேள்
திருவாம்வெள்ளை சிறந்திடுவீரமும்
உருவானநாக ரசத்திடுத்துவ்வியும்
திருவானபச்சையுந் தந்தெந்தாரமே. ௨௱௰௩

தாரமொடொன்றாய் நகர்த்திப்பொடித்திடு
பூரமாஞ்செப்பு அகலிலடக்கியே
சாரமாய்மூடியே சாத்துமாப்பீலைதான்
காரமாஞ்சட்டியில் வைகயெரித்திடே. ௨௱௰௪

எரித்தபதந்தானென்றாய்ப்பொரித்திடு
குறித்தபதத்தினில்குணமாயிறக்கியே
தரித்தமருந்தாந்தன்மையாய்க்கட்டியே
பருத்தசெவுரிப்பாஷாணமாகுமே. ௨௱௰

[வீரம்.]

ஆகுமேவீரத்திடவுகள்சொல்லுவேன்
வாகுடன்வெள்ளைவார்சிலைலிங்கமும்
பாகுடல்பச்சையும்பாங்காகெந்தியுந்
தாகமாய்வெட்டியுந்தன்னொடுசாரமே. ௨௱௰

சாரமுங்காரமுந்தன்னோடுதாரமும்
ஓரிடைகூகமுருகப்பொடித்திடு
நேரிசோசிநிலைத்தநல்குப்பியில்
வாரிசெலுத்திவகையுடன்மண்ணிடே. ௨௱௰

மண்ணிடுதாழியில்வைத்தெரித்திடு
உன்னியருகியுறைந்திடுங்கட்டிபோல்
வன்னிநிறைந்துவளர்சாமம்நாலினில்
தன்னிமையாகத்தானதையெடுத்திடே. ௨௱௰

எடுத்திடுகுப்பியிதமாய்க்குருந்தபின்
விடுத்ததைப்பாருவெண்மதியாகிடும்
அடுத்தசாக்கு அதிகுருவிதாம்
படுத்தநேர்வீரம்பாஷாணமானதே. ௨௱௰

[ஞலாக்காய்கெந்தி]

ஆனதோர்கோவிஅதிகநல்கெந்தியை
புனைவெசொல்லைதட்டித்தியாய்க்கேளு
தோணவேதாரந்தொடுசிலைபச்சையும்
புனைவேதுத்தம்புகுந்வெள்ளைலிங்கமே ௨௱௨௰

லிங்கமும்வீரமும்நேர்சமனாகவும்
சங்கையாயெடுத்துத்தானிடுகுப்பியில்
அங்கமதாகஅமர்ந்திடுத்தாழியில்
சங்கையுடனேநாக்கியெரித்திடே. ௨௨௧



எரித்திடுசாமமியல்பாயெரிந்தபின்
குறித்தசாக்குக்குணமாக்கட்டுண்ணும்
பரித்திடுக்குப்பியைப்பதமாயுடைத்திடு
தரித்திடுங்கோழிதலைக்கெந்தியானதே ௨௨௨

[கனாக்காய்கெந்தி]

கெந்திகனாக்காய்கெந்தியைக்கேளு
அந்தந்தாருசுஆனதோர்தூத்தமும்
வந்திடுநாகம்வளர்ரசவீரமும்
பந்திடுலிங்கமும்பாஷாணமானதே ௨௨௩

தாரமொடுசிலைசத்தியுங்கூட்டியே
வீரமாமொன்றாய்வெண்டிப்பொடித்திடு
சாரமாங்குப்பியில்தானிட்டெரித்திடு
காரமாயொன்றாய்க்கட்டியுருகுமே ௨௨௪

கட்டியருகிக்கனகம்போல்நின்றிடுஞ்
சட்டமாய்க்குப்பியைதகர்த்தெடுத்திடு
நட்டப்பராதநாரணிசத்துசள்
தட்டில்லாகனாக்காய்கெந்தியுந்தானே ௨௨௫

[பவளப்பக்கு]

தானும்பவளப்புத்துசமத்துகேள்
கோணுனகெந்தியுங்கெவுரிசிலைதாரமும்
பூணுகபச்சையும்புசம்ரசநாகமும்
காணுகவீரமுங்கடுலிங்கசாரமே ௨௨௬

சாரமோடொன்றாய்ச்சதிராய்ப்பொடித்திடு
காரமாங்காசிக்கருவானகுப்பியில்
பாரயாபேந்திப்படுபாடன்சீலைசெய்
வீரமாய்த்தாழியில்விட்டுமண்ணிடே ௨௨௭

மண்ணிட்டுடுப்பில்வானமாயெரித்திடு
விண்ணிட்டுப்போலுவெந்திடுமேனிகள்
கண்ணிட்டுமெழுகக்கருவாயெரித்திடு
நண்ணிட்டுநாலுசாமந்தனவிடே ௨௨௮

தனைவிட்டெரித்துச்சதிராய்க்குளிர்ந்தபின்
மனதுற்றுக்குப்பியைவாகாயுடைத்திடு
புனலொத்துநின்றபடியதைபவளம்போல்
பனமொத்துநின்றபவளபாஷாணமே ௨௨௯

[லிங்கபாஷாணம்]

பாஷாணமானபத்மமரிதாரம்
ஆசாரமாகஅருளும்வெள்ளைநிம்பள்
கூசாதபச்சைக்கருவானலிங்கமும்
பேசாதவெள்ளையும்பெரிதானவீரமே ௨௩௰

வீரமும்நாகமும்மேல்சிலைதாரமும்
காரமுஞ்சாரமுங்கந்திக்கிருந்தமும்
பாரமாமொன்றாய்ப்படியப்பொடிசெய்து
சாரமாங்குப்பியில்தானிட்டுமண்ணிட்டே ௨௩௧

மண்ணாலுபூசிவளமானநாழியில்
நண்ணமாகநடுவிலிருத்தியே
பண்ணினாழியில்பதியாமனைவிட்டு
எண்ணிவேதாளசாமமெரித்திடே ௨௩௨

எரித்திட்டெடுத்ததையாய்க்குளிர்ந்தபின்
குறித்திட்டநேகங்குருவைவணங்கிடு
மரித்திட்டகுப்பியைவாகாயுடைத்திடு
பரித்திட்டதாரப்பாஷாணலிங்கமே ௨௩௩

[கோடாசூரிபாஷாணம்]

இங்ஙேகோடாசூரிபாஷாணஞ்சொல்லுவேன்
தங்கியவீரமுந்தன்றுநாகமும்
பொங்கியபச்சையும்பூரசலிங்கமும்
அங்கமனோசிலைஅரிதாரங்கூட்டியே ௨௩௪

கூட்டியேகெந்தியுங்குருவானவெள்ளையுந்
தாட்டிமோகச்சதிராய்ப்பொடித்திடு
நாட்டிடுசெப்புக்குப்பிநடுவிலே
போட்டுச்சீலைபொருந்தேறுசெய்திடே ௨௩௫



செய்திடுந்தாழிசிறப்பாநடுவிலே
வைத்திடுங்குப்பியைவாகாய்மனைவிட்டு
எய்திட்டெடுத்தாறியல்பாயசாமம்
கொய்திடுஅனலைக்குறுகஎரித்திடே ௨௩௬

எரித்திடுந்தாழியியல்பாய்க்குளிர்ந்தபின்
விரித்திடுகுப்பியைவெண்டியெடுத்திடு
குறித்தகோடாசூரிகுணமாய்ச்சிவந்ததான்
தரித்ததோர்வேதைக்குத்தானவுருகுமே ௨௩௭

பஞ்சபட்சிசரக்கு.

நானவனுனைதரும்பஞ்சபட்சியை
கோனவன்தன்னால்குறிப்புடன்சொல்லுவேன்
ஆனபூரசமும்அப்பினில்ரசமும்
வானவர்போற்றுமகாரசங்கூட்டியே ௨௩௮

கூட்டியரசமுங்குருபச்சைவெள்ளையுந்
காட்டியமானதளவாய்மனோசிலை
நாட்டியவீரம்நலமானலிங்கமும்
மாட்டியொன்றாகமடியப்பொடித்திடே ௨௩௯

பொடித்திடுமருந்தைப்போட்டிடுகுப்பியில்
தொடுத்திடுசிலைஅருக்கமாயேழுசெய்
விடுத்திடுதாழியில்வெண்டிமனைவிட்டு
கொடுத்திடுதீயதான்றுயக்காறுசாமமே ௨௪௰

சாமமேமெத்தத்தனலாறிநின்றபின்
ஆமெனக்குப்பியைஅடைவாயுடைத்தெடு
நாமெனநின்றநடுப்பஞ்சபட்சிதான்
காமனைவென்றகெந்தியுமானதே ௨௪௧

குங்குமப்பாஷாணம்

நீயானகுங்குமப்பாஷாணஞ்சொல்லுவேன்
மாயானகெந்தியுமனோசிலைதாரமும்
தாயானபச்சைத்தருலிங்கவீரமும்
காயாதவெள்ளைக்கொடுத்ததுஞ்சாரமே ௨௪௨

சாரமாம்நாகத்தனில்கருவங்கமும்
பாரமாய்க்கூட்டிப்படியப்பொடித்திடு
காரமாம்நீரில்கலக்கிப்பிசறியே
வாரமாக்குப்பியில்வாரியடைத்திடே. ௨௪௩

அடைத்திடுகுப்பிக்குச்சமலங்கிலிசெய்
உடைத்திடாத்தாழியிலுான்றிமனாவிடு
கட்டத்தினிலக்கினிகாரணமாக
திடப்படஅஞ்சுசாமமெரித்திடே. ௨௪௪

எரித்திடுதாழியியல்பாய்க்குளிர்ந்தபின்
குறித்திடுகுப்பியைக்குணமாயுடைத்திடு
தரித்திடுமஞ்சள்தன்னிறம்போலவே
பரித்திடுங்குங்குமப்பாஷாணமானதே ௨௪௫

ரத்தபாஷாணம்.

ஆனதோரிரத்தபாஷாணஞ்செய்கைகேள்
பேணுமனோசிலைபெரிதானலிங்கியும்
வானவர்சூதவரவீரநாகமும்
ஈனவெலிங்கங்கடிதானகெந்தியே ௨௪௬

கெந்தகம்பச்சைகெப்பிரவெள்ளையும்
பந்தமதாகப்படியப்பொடித்திடு
அந்தமயத்தினையரிதானகுப்பியில்
சொந்தமாயிட்டுசுத்தேமூசிலையே. ௨௪௭

சிலைமண்செய்துசிறப்பாகத்தாழியில்
நிலையமாகஅமர்த்திமனைவிடு
வாலையைப்போற்றிவைத்திடுரூபியில்
கோளைகள்நீங்கிக்குணமாயுருகுமே. ௨௪௮

உருகித்திரண்டுவருமையாய்க்கட்டுண்ணும்
அருகுமறுநாள்தாயெடுத்திடு
மருவிக்குப்பியைவளமாயுடைத்திட
சருவெரத்தப்பாஷாணசத்திமே. ௨௪௯



[கோமுகப்பாஷாணம்]

சத்தான கோமுகந்தன்மைதனைக்கேளு
வித்தானவீரம்விளங்குமனோசிலை
முத்தான வெள்ளைமுழுநீலந்தாரமுஞ்
சுத்தானலிங்கமுஞ்சூதமுநாகமே ௨௫௰

நாகமுங்கெந்தியுநயமாகக்கூட்டியே
பாகமாயொன்றாய்ப்பதியப்பொடித்திடு
ஆகமாச்செப்பகுவிலடக்கியே
தாகமாத்தாழியில்தனித்துமனைவிடே ௨௫௧

மன்னிட்டுதாழியைவளமாயடுப்பினில்
கண்ணிட்டுப்பார்த்துக்கருகவெரித்திடு
வின்னொருத்துநின்றவேதனைப்போற்றியே
பண்ணுநிறக்கிப்பதிவாயெடுத்திடே ௨௫௨

எடுத்திடுசெப்பைஇதமாயுடைத்திடு
கடுத்தசரக்குக்கனமையுருகியே
தொடுத்ததோர்கட்டியாய்த்தோன்றவிருத்திடும்
படுத்தகோமுகப்பாஷாணப்பண்பிதே ௨௫௩

[அருகப்பாஷாணம்]

பன்பாரருகப்பாஷாணஞ்சொல்லுவேன்
றண்டானலிங்கந்தாரசமுடன்
வெண்பாதபச்சையும்வெள்ளையுந்தாரமும்
தண்டானவீரமுநல்லகெவுரியே ௨௫௪

கெவுரியோடொன்றாய்கெணிதமாய்க்கூட்டியே
சவுரியமாகத்தகர்த்துப்பொடிசெய்து
கவுரியசெப்புக்கலசந்தனிலிடு
பவுரியபாண்டத்தில்பதித்துமனைவிடே ௨௫௫

மனைவிட்டுசெம்பிமறிவைத்தொழுதயின்
கனைவிட்டடுப்பில்கதிக்கவெரித்திடு
தனைவிட்டுதாஞ்சாமமெரித்தபின்
ஆனைவிட்டுறக்கிஞ்சியெடுத்திடே ௨௫௬

எடுத்தகலசமியல்பாயுடைத்திட
தொடுத்தகருத்தாருவமாய்க்கட்டியே
அடுத்தகருகமந்திரமாகிடும்
படித்தகருகப்பச்சைப்பாஷாணமே ௨௫௭

[தாத்தபாஷாணம்]

பச்சையாந்தாத்தப்பாஷாணஞ்செய்கைகேள்
இச்சைகருக இதின்ரசங்கெந்தகம்
கொச்சைமனோசிலைக்கூர்வெள்ளைதாரமும்
நிச்செயவீரம்நேரானலிங்கமே ௨௫௮

லிங்கமுடன்தாத்தம்நேராய்பொடிசெய்து
அங்கமாய்நாகமாநாகக்குப்பியில்
சங்கையுடனேசமர்த்தாய்ப்பொடித்திட்டு
தங்கநற்குப்பிக்குச்சமத்தாய்செம்மணவிடே ௨௫௯

செம்மணவிட்டுசேருள்ளக்குப்பியை
தன்மையசெப்புத்தாழிதனிலிடு
நன்மையதாயனல்நன்றாயெரித்திடு
உண்மைநாலுசாமம்உகந்தெரித்திடே ௨௬௰

எரித்தபதந்தானென்னேல்பொரிந்திடும்
தெளிந்துஇறக்கிசீராய்குளிர்ந்தபின்
அறிந்துநல்குப்பியைபாளடுத்திடு
மருந்துடன்குப்பியும்வாகாயொன்றாகுமே ௨௬௧

ஒன்றாகக்கூட்டியுருகத்திரண்டிடும்.
நன்றாகநீயும்நயமாயெடுத்திடு
குன்றாதசத்துக்குருவிதுமக்களே
பன்றானதாத்தப்பாஷாணவித்தையே ௨௬௨

[ரசிதப்பாஷாணம்]

வித்தானரசிதப்பாஷாணஞ்சொல்லுவேன்
சுத்தானவெள்ளைத்துலங்கும்ரசமுடன்
பத்தானவீரமும்பாஷாணந்தாரமும்
மூத்தாமனோசிலைபூநீலப்பச்சையே ௨௬௩



பச்சையும்பாகமும்பதிவானகாரமும்
இச்சையாக்கூட்டியினையப்பொடித்திடு
நிச்சயமாகநேர்வெள்ளிகுப்பியில்
உச்சிதமாகவூட்டியடைத்திடே ௨௬௪

அடைத்திடுகுப்பிஅயமானபாண்டத்தில்
திடத்துடன்வைத்துசெம்பிமணலிடு
படைத்திடுஞ்சத்தியைப்பண்பாகப்பூசித்து
கடத்திலிலக்கிலிக்கருவாயெரித்திடே. ௨௬௫

எரித்திடுஞ்சாமம்சாறுகூட்டியே
அரித்தஅனல்போல்துலங்கவெரித்திடு
குறித்தசாத்துங்குப்பியுங்கூட்டியே
தரித்தமெழுகுபோல்தானேயுருகுமே. ௨௬௬

உருகித்திரண்டுஒடுங்கியிருந்திடும்
திருகியேபாண்டந்தானேகுளிர்ந்தபின்
மருகியிராதேமனதாளெடுத்திடு
பருதிரசிதப்பாஷாணச்சிங்கியே. ௨௬௭

சூதபாஷாணம்.

சிங்கியாஞ்சூதபாஷாணஞ்சொல்லுவேன்
தங்கியசூதமுந்தாரமும்வீரமும்
பொங்கியகெந்தியும்பொற்சிலைபச்சையும்
லிங்கமும்வெள்ளையும்நேரானகாரமே. ௨௬௮

காரமோடொன்றாய்கதிக்கப்பொடிசெய்து
சீர்கார்லங்கச்சிமிழிலடக்கியே
நேர்பெருஞ்சட்டியில்நிறுத்துமணலிட்டு
கூர்பெருநாதனைக்குறித்தடுப்பேற்றிடே. ௨௬௯

எற்றியேதீபமீராறுசாமந்தான்
காத்திருந்தெரித்திடுகடுங்கனல்தாவவே
சேர்த்தமருந்துஞ்சிமிழிமுறுகிடும்
வாத்தியிறக்கிவரிசையாய்ப்பார்த்திடே. ௨௭௰

பார்த்திடும்போதுபடிகம்போல்கட்டியே
நேர்த்தியதாகநிலைக்குமருந்தது
போற்றியபாருபுதுமைகள்கண்டிடுஞ்
சாற்றியசூதபாஷாணஞ்சித்தியே. ௨௭௧

கெந்திப்பாஷாணம்.

சித்தியாங்கெந்திப்பாஷாணந்தன்மைகேள்
முத்திரியும்வெள்ளையுமுதுவீரபச்சையுஞ்
சத்தியமேறுசிலைசிவதுத்தநாகமும்
பத்தியகெந்தமும்பரமானலிங்கமே. ௨௭௨

லிங்கம்ரசமுடனேசரிக்கூட்டியே
பங்கமதாகவரைத்திட்டுபொடித்திடு
சங்கையுடனேதாம்பிரக்குப்பியில்
உங்கக்கொடுத்துஉருகிமண்சீலையே. ௨௭௩

சீலைவலுவாய்சிமத்துமண்தாழியில்
ஆலயமாகவரைத்திமணலிடு
வாலைப்போற்றிவைத்துநல்இடெரித்து
தாளுமுருகித்துவள்இறுகுமே. ௨௭௪

இறுகுமேஜாமம்இயல்புடன்
மறுகியிறக்கிமறுநாளெடுத்திடு
குறுகியகுப்பியைக்குணமாயுடைத்திடு
திருகியகெந்திப்பாஷாணஞ்செய்மையே. ௨௭௫

நீலிப்பாஷாணம்.

செம்மையாம்நீலிப்பாஷாணஞ்சொல்லுவேன்
உம்மைகெவுரியுடன்லிங்கவீரமும்
வண்மையகெந்திவளர்சிலைதாரமும்
நன்மையசூதமும்நாகமுங்கூட்டியே ௨௭௬

கூட்டிக்குமுறக்குழையப்பொடித்திடு
போட்டிடுகுப்பியில்பொருந்தமண்லிடு
நாட்டிடுதாழியில்நல்மணல்கொட்டியே
மாட்டிதீநீயமயங்கவெரித்திடே. ௨௭௭



எரித்திடசாமமிரண்டதனிலே
குவித்தசரக்குங்குறுகவேகட்டுண்ணும்
எரித்தஅனலுமிதமாய்க்குளிர்ந்தபின்
தரித்தநல்குப்பியைத்தகர்த்தெடுத்திடே ௨௭௮

எடுத்திடுகட்டியையிம்பங்குளிரவே
கொடுத்திடுலோகங்குமுறப்பழுத்திடும்
தொடுத்திடும்பூசையைச்சூத்தரம்போலவே
முடித்திடுஞ்சோதிமுழுநீலவர்ணமே ௨௭௯

வர்ணம்நிறைந்தவாசியைப்போற்றியே
தருணமதாகத்தன்னிலடக்கிடு
சொர்ணமதானசோதனைகண்டபின்
சரணமதென்றுநீதாளிணைப்பூசியே ௨௮௰

[காகபாஷாணம்]

பூசியகாகம்புனைந்தபாஷாணம்
பேசுவேனன்றாய்ப்பிரியமாய்க்கேளுங்கோள்
வீசியகெந்தம்விரித்தமனோசிலை
மாசில்லாவீரம்வடிவெள்ளைதாரமே ௨௮௧

தாரமுஞ்சூதமுந்தன்னாகமும்பச்சையும்
பாரமாய்க்கூட்டிப்பதியப்பொடித்திடு
காரமாயயச்செப்பிலடக்கியே
காரமாய்ச்சட்டிதனிலிட்டெரித்திடே ௨௮௨

எரிப்பதுநாலுசாமமெரித்தபின்
குவிப்புடன்சட்டிகுளிறவெடுத்திடு
தரிப்புடனயச்செம்பைத்தகர்த்திட
கருப்புள்ளகாகபாஷாணமாகுமே ௨௮௩

[கருணைபாஷாணம்]

காணவேசொர்ணக்கருணைப்பாஷாணத்தை
பூணவேசொல்வோம்புத்தியாய்க்கேளுங்கோள்
தோணவேலிங்கமுந்தொட்டிசிலைதாரமும்
பேணவேசூதமும்பெரிதானநாகமே ௨௮௪

நாகமும்வீரமும்நலமானசாரமும்
பாகமாயொன்றாய்ப்படியப்பொடித்திடு
ஆகமாத்தங்கமகலிலடக்கியே
வேகமாய்த்தாழியில்விடுத்துமணவிட்டிடே ௨௮௫
மண்ணிட்டமர்த்திவாயையடைப்பினில்
கண்ணிட்டுநோக்கிக்கதிக்கஎரித்திடு
தன்னொத்துநின்றசரக்குடன்தங்கமும்
ஒன்னொத்துக்கூடியுருகிஇறுகுமே ௨௮௬
இறுகிமணிபோலிருக்கும்பரியது
மறுகியலோகத்தில்மாட்டிடத்தங்கமாம்
உருகியநல்மணியொன்றுனபூரணம்
திருகியசொர்ணப்பாஷாணதங்கமே ௨௮௭

லவணபாஷாணம்.

தங்கலவணமுகிலானசத்துகேள்
பொங்கியகாரமும்புகழானசாரமும்
தங்கியவீரமுந்தருவானபூரமும்
அங்கமென்றுசிலைஅரிதானசூதமே ௨௮௮
சூதமும்லிங்கமுந்துடியானவெடியுடன்
நீதமாய்க்கூட்டிநிறுத்துப்பொடித்திடு
பாதமாங்குப்பியில்பதித்துமண்சீலைசெய்
சீதமன்தாழியில்செலுத்திமன்செய்யிடே ௨௮௯
செம்மிமணவிட்டுசிராயடுப்பினில்
கம்மியிராமல்கதிக்கஅனலிடு
வெம்மிமுச்சாமம்வெந்துஇறுகிடும்
கொம்மயக்குப்பியைக்குணமாயொத்திடே ௨௯௰
எடுத்திடுகுப்பியுமிளகியுருகியே
பருக்கியவெள்ளியத்தறுதாக்கி
உருக்குங்களங்கமொன்றதுதாக்க
நெருக்கியமாற்றுநேரைம்பதாமே ௫௱௧

அன்புடன்செம்பினிலறுபதாயதாம்
பண்புடன்றுடவனில்பத்தனாக்காணும்
செம்புடன்லோகமுஞ்சேரப்பழுத்திடும்
நம்புங்களங்கத்தைநன்றாய்ச்செந்தூரியே. ௫௱௨

நன்றுங்களங்கிடைநாட்டிடுகெந்தகம்
பண்டானவீரமும்பதியப்பொடித்திடு
குன்றுதநீரிற்குணமாயரைத்திடு
கண்டவழித்துச்சுருளவுருட்டிடே. ௫௱௩

உருகவுருட்டியுகமாயுலர்த்தியின்
அருளானவோட்டிலடக்கிமண்சீலைசெய்
மருவானசோதியைவணங்கிப்புடமிட
வுருவாஞ்செந்தூரமுறுதியாய்க்காணுமே. ௫௱௪

உறுதியாய்வெள்ளியிலொருநூற்றுக்கொன்றிட
வுறுதியாய்நின்றுவெளிகொண்டதங்கமாம்
திருகியலோகமுஞ்சேரப்பழுத்திடு
தருகியவங்கத்திற்றடவிப்புடமிடே ௫௱௫

தடவிப்புடமிடத்தானேபழுத்திடுங்
குடவனும்படிக்கூர்மையாய்க்கண்டிடு
திடமுடன்மண்டலந்தின்றேனும்பணவிடை
அடவுடன்வாசிஅசையாதிருக்குமே. ௫௱௬



தாளகக்களங்கு:

இருக்கின்றதாளகமென்னென்றுசொல்லுவேன்
உருக்கிவுப்புமுளவல்லிம்பச்சையும்
நிறுத்திடல்கூட்டிநின்றநீர்விட்டரை
சுருக்குடனைத்துக்கருவாகவோட்டிடே. ௫௱௭

வட்டமுவோட்டில்வைத்துமண்சீலையே
திட்டமாய்ப்புடத்தில்செலுத்தியனலிடு
இட்டமாயுருகியிருக்கும்நல்லியமாய்
மட்டமாய்த்தங்கம்வைத்துவுருக்கிடே. ௫௱௮

உருக்குமிடையதொடாதிருக்குமே
திருக்கென்னவெள்ளியில்சேர்த்திடுநாற்றென்று
அருக்கனும்வெள்ளியுமமர்ந்துவருகிறால்
சுருக்கென்னமாற்றதுசொல்லவொண்ணாதே. ௫௱௯

சொல்லாதசோதித்தலங்கிடுஞ்செம்பினில்
நல்லாப்பழுத்திடும்நாகுங்குடவனில்
உள்ளாங்களங்கிதுடன்சேருகெந்தகம்
தள்ளாதவீரமுந்தாக்கிப்பொடித்திடே ௫௱௰

பொடித்திட்டநீரில்பொன்றஅரைத்திடு
அடித்திட்டவில்லைபோலாக்கியுலர்த்தியே
வடித்திட்டசெப்பில்வைத்துப்புடமிட்
டெடுத்துப்பார்சோதிபோகச்செந்தூரமே ௫௱௰௧

ஏகச்செந்தூரமெடுத்திடுவெள்ளியில்
தாகமாய்நூற்றில்தாக்கியுருக்கிறால்
வேகமாய்மாற்றுவேணுந்தானுண்டு
ஆகமாய்வங்கத்திலமுத்திப்புடமிடே ௫௱௰௨

புடமிடத்தங்கம்புடத்தங்கமாயிடும்
திடமானலோகத்தில்சேர்க்கநல்லேமமாம்

விடமானசெந்தூரம்விரும்பிப்பணிவிடை
புடமானமாகவுண்டியவுடலமதே ௫௭௩

மண்டலங்கொண்டிடமாயவனுருவாய்
கண்டிடுந்தேகங்கதிர்போலொளிவிடும்
எண்டிசைசமூழுதுமேகசெமனமாய்
அண்டர்கள்போற்றஅரூபமுமாகுமே ௫௭௪

[பாஷாணக்களங்கு.]

அரூபமாய்வீரமடங்கும்பாஷாணத்தில்
உருவாவுப்புங்காரமுங்கூட்டியே
பருவானநீரிலுகந்தலாத்துண்டைசெய்
உருவானஓட்டில்வைத்துப்புடமிடே ௫௭௫

புடமதுகட்டிப்பொருந்தவுருக்கியே
திடமுள்ளதங்கஞ்சேருஞ்சரியிடை
அடவுடன்குகையிலயர்த்தியுருக்கிட
விடமுள்ளதங்கமாய்வீரமுங்கூடுமே ௫௭௬

கூடியருகுங்குருவாங்களங்கத்தை
நாடியவவ்விதயத்திடுயல்பதில்
சாடியருகத்தங்கமதாகிடும்
வாடியிராதேவளர்செப்பில்தாக்கிடே ௫௭௭

தாக்கிடுசெம்புந்தானேபழுத்திடுந்
தாக்கிடலோகத்தில்தானேயுணர்ந்திட
பாக்கியமாகிப்பழுக்கிடும்வேதையாம்
பாக்கியமென்றபதியிலிருந்திடே ௫௭௮

பதிவன்நிதியும்பார்த்துமகிழ்ந்திட்டால்
நிதியொன்றுங்காணுநினைவுமழிந்திடும்
மதியுடன்விதியையும்வணங்கிப்பார்த்திடில்
விதிமதியொன்றல்விளங்கிடுந்திண்ணமே ௫௭௯



திண்ணமாய்வீரம்செலுத்துங்களங்கத்தில்
உண்ணியகெந்தியுமுடன்வீரங்கூட்டியே
வன்னியநீரில்வலுவாயரைத்திட்டு
மின்னியவட்டாய்விளங்கப்பிடித்திடே ௫௮௰

பிடித்திடுவட்டைப்பெருகியசெம்பினில்
அடைத்துப்புடமிலன்புடன்வைத்திடு
வுடைத்திடுமருந்துஉருகிச்செந்தூரமாம்
திடத்துடன்வெள்ளியில்சேர்த்திடத்தங்கமே ௫௮௧

தங்கமாம்வங்கத்தில்தடவிப்புடமிட
மங்களமாகமறுகிப்பழுத்திடும்
அங்கமாய்மச்சனமைத்திடும்வாக்கியம்
எங்குங்கிடைக்குமோவேகாந்ததீபமே ௫௮௨

ஏகாந்தமாகியிருக்குஞ்செந்தூரத்தை
ஏகாந்தமாகஇருந்துபோசித்திட
ஏகாந்ததீபமெமென்றுசொல்லுவேன்
ஏகாந்தவாசியிருதயமூலமே ௫௮௩

[கெவுரிப்பாஷாணம்]

மூலங்கெவுரிமொழிந்தபாஷாணத்தில்
சாலவேயுப்பத்தகன்றுடுபச்சையுஞ்
சிலமாய்க்கூட்டிசேர்த்தரைவிந்துவில்
பாலமாஞ்செப்பில்பதித்துப்புடமிடே ௫௮௪

பதித்துப்புடமிடப்பருவமாய்க்கட்டிடுங்
கதித்திடுதங்கங்காட்டுஞ்சரியிடை
விதித்திடுங்குகையில்விளக்கவுருக்கிட
அதித்தநூலென்றாய்த்துலங்கவுருகுமே ௫௮௫

குலங்குங்கெவுரித்தோன்றுங்களங்கதாம்
பலங்கண்டுலோகத்தில்பார்த்திடத்தங்கமாம்

களக்கதிலெச்சிப்புல்லட்டியவீரனும்
மலங்கவேகட்டிமாட்டிப்பொடித்திடே ௫௬

மாட்டிப்பொடித்துமடங்கவுரைத்திடு
நீட்டியரிசிதிரட்டியுருட்டியே
நாட்டிடுசெப்பில்நயத்துப்புடமிட
வாட்டமில்லாமல்வளருஞ்செந்தூரமே ௫௭

வளர்த்திடுலோகத்தில்மாட்டுசெந்தூரத்தை
உலர்த்திடுமேருவிலொடுக்கிப்புடமிட
பலந்தருலோகம்பழுக்குந்தங்கமாம்
கலந்திடுமூசிக்கருகையில்நிப்பிடே ௫௮

நிப்பிடும்வெள்ளைநிலைத்தமாதானத்தில்
கொண்டிடுமுப்புக்கூர்பச்சைவீரனும்
ஒன்றதாய்க்கூட்டியுருட்டியதைத்திடு
சென்றிடும்வித்துவில்சேர்த்ததைத்துருட்டியே ( )

உருட்டிக்குகையிலுறைப்புடமிட
மருட்டியவெள்ளையுமங்கியுருகிடும்
இருட்டில்லாவெள்ளிச்சேருசரியிடை
மெருட்டியவெள்ளியும்வெள்ளையுங்கூட்டுமே ௬௰

கூட்டியுருக்கிக்குணமாய்க்களங்கதாம்
நாட்டியசெப்பில்நாட்டிடுநாற்றன்று
தேட்டியுருக்கத்தெவிட்டாதவெள்ளியாம்
ஓட்டிக்களங்கத்திலூதமுஞ்சேர்த்திடே ௬௧

சேர்த்திடுவீரந்திரமாய்ச்சரியிடை
நேர்த்தியாய்க்கூடிநிலைத்திடுவித்துவில்
போற்றியதைத்துப்போடுபுடத்தினில்
ஆற்றியெடுக்கவுங்கொம்பற்பமே ௬௨

பற்பமெடுத்தப்பதிவானசெப்பினில்
உற்பனமாகவுருக்கிநாற்றன்றிட



அற்புதமாகுமலத்துவெருத்திடும்
தப்பிதமில்லாதானவெள்ளியே ௬௩

தானானவெள்ளித்தங்கயிலாசமாம்
ஊனமாற்றப்புகழாயிரத்தெட்டு
தேனானவங்கஞ்சேர்த்துக்குகையிலே
கோனாருக்கக்குருபற்பம்போட்டிடே ௬௪

பற்பமதனில்பதித்தவுடனே நீர்
உற்பனமாகவுறைஞ்சியுருகிடும்
அற்புதமானஆனவெள்ளியுமாம்
விற்பனமாங்குருவெள்ளியுமானதே ௬௫

வெள்ளியென்றெண்ணிமேவியிராதே
தெள்ளியசெம்பிற்செந்தூரமொன்றிட
துள்ளியமாற்றுசொல்லவும்போகா
தள்ளியலோகந்தாவிதுவாகுமே ௬௬

[ரசசிங்கி]

தான்ரசசிங்கித்தனுடன்பெருமைசேர்
வீரனுங்கெந்திவிலைசயரிதாரமும்
பெருந்துருசும்பெருலிங்கவீரமும்
பூனைகாவுப்பும்பொருந்தேழுங்கூட்டியே ௬௭

கூட்டியவைத்திடுருவானசெயநீரில்
நாட்டியதைத்துநன்றாய்வழித்திடு
பூட்டிடுவில்லைபோல்பொருந்தவேசெய்துநீ
வாட்டாவியில்வைத்துணத்திடே ௬௮

எடுத்திடுவில்லையிதமானசெப்பினில்
அடைத்துப்புடமிடவன்புடனுருகிடும்
கொடுத்திடுந்தங்கங்கூட்டுஞ்சரியிடை
விடுத்திடுகுகையில்வேண்டியுருக்கிடே ௬௯

உருக்குங்களங்கத்திலுடன்சேருங்கெந்தகம்
நெருக்கியவீரமும்நேர்சரிகாரமும்

திருக்கறக்கூட்டிச்சேர்த்தனைவிந்துவில்
சுருக்குள்ளநாதநீர்க்கருவும்விட்டாட்டிடே ௯௱

ஆட்டிடுங்கமலையமர்ந்திடும்பாவிலே
நாட்டியனைக்கறல்லமெழுகதாம்
கூட்டியுருட்டிக்குணமாயெரித்திடு
நீட்டும்பரிசனப்திடமுந்தாபமே ௯௱௧

தாமிகள்போல்நவலோகமடக்கியே
தாமிதமானமன்தானதுபூசிப்பின்
நாமிகமலத்தில்நல்தலைவைத்துமேல்
கோமிதமாகக்கொடுத்திடுமெழுகதே ௯௱௨

மெழுகதில்செல்லமேலேபுகையெழும்
பலுகணிலாசல்ப்பார்த்துஅடைத்திடு
நெகிழிடும்புகையில்நேரானலோகமும்
அழுகிப்புழுகிஅழன்றுபழுக்குமே ௯௱௩

அழன்றமெழுகதினன்பாயெடுத்துநீ
தழன்றிடுமேனியில்தானேதடவிடு
வுழன்றிடுந்தேகமுறுதியதாகிடும்
கழன்றநாரப்புக்கடுகவிருகுமே ௯௱௪

இறுகிடுந்தேகத்திருந்த அழுக்கதைப்
பருகியெடுத்துப்பாச்சிடும்வல்லியில்
சொருகில்ப்பழுக்குஞ்சொரூபமெழுகது
மறுகியிராதேமார்க்கத்தில்நில்லிடே ௯௱௫

மார்க்கமாய்நின்றமலையினிற்சஞ்சரி
தீர்க்கமாஞ்சித்தர்கள்செய்தபொருளுகள்
பார்க்கப்பலிவொளும்பருமலைபோலவே
ஏற்கையாய்நின்றுஎளிதாகப்பார்த்திடே ௯௱௬

எளிதாகப்பார்த்துலகமாமம்பரம்
தெளிதாகநீயும்நின்றதைஆசித்தால்



வழியோடேசித்தர்வந்துவுனதிடம்
பழிபாதுயினைப்பற்றுவார்பார்த்திடே ௯௱௭

பார்த்திடுமஞ்சனப்பாஷாணந்தன்னையே
சார்த்திடுந்தொட்டியுங்கற்பரிகாரமுதில்
சேர்த்திடும்லிங்கஞ்செலாமதஅஞ்சனம்
போற்றிடஆறும்பொருந்தொன்றாய்கூட்டிடே ()

கூட்டியசட்டிக்குமுறவேகாய்ந்தபின்
போட்டுவறுத்திடும்பொருந்தவாய்நீர்விட்டு
நாட்டிவருகையில்நற்சாக்காருமே
வாட்டிக்கருக்கவலுவாய்சிவக்குமே ௯௱௯

சிவந்தசாக்கைத்திரமானகல்வத்தில்
சிவந்தநீர்விட்டுச்சேர்த்தரைசாமந்தான்
சிவந்தமுலைப்பாலுந்தேனுமொன்றாக்கியே
சிவந்தனைநோக்கிச்சேர்த்தனைமையதாம் ௯௱௰

மையானமையைமார்க்கமறிந்திலார்
மையானமையைவழித்துச்சிமிழில்வை
மெய்யானதேவிவளாஞ்சனுதேவி
ஓமையமாய்நின்றுவழிகாட்டுவாளே ௯௱௰௧

வழியென்னவென்றால்மையானமையாம்
தெளிதானமையைநெற்றியில்பொட்டிடு
சுழியோடேநின்றுஎழட்டிநீபார்த்திட
தெளிவாகபூமிதிறக்குங்கண்பார்த்திடே ௯௱௰௨

பார்த்திடுமேலேபகிலாயிருந்துநீ
பார்த்திடும்போதில்பகலேநட்சத்திரம்
பார்த்திடத்தோனும்பதிகோடிகாதமும்
பார்த்திடக்கிட்டப்பதிவாயிருக்குமே ௯௱௰௩

பதிவானநெய்யில்பதித்துனைதீட்டியே
பதிவாய்த்திலதம்பதித்துமலையின்மேல்

பதிவாகவேறிப்பதம்பெறச்செய்கையில்
பதிவாயிருக்கும்பாருயிர்பயிருமே ௯௱௰௪

உயிருடன்பயிருமாகத்துவசியமாம்
பயிருடனுயிரும்பருத்துறவாகினால்
வெயிலுடன்பனியையும்விரும்பியிருக்கலாம்
பயிலுடனுயிலாய்ப்பார்மலைகண்டிடே ௯௱௰௫

கண்டிடுமியிலிங்கங்கறுத்தபாஷாணத்தில்
விண்டிடுந்திகைவரிவிளங்கியபச்சையும்
நின்றதோருப்புநேர்சரிகூட்டியே
ஒன்றியநீரில்சுற்றியுரைத்திடே ௯௱௰௬

சுத்தியவாக்குக்குருவாமுதித்துமே
பத்தியுடனேபதிவாயுருட்டிடு
வெற்றிரவியில்விசையாயுலர்ந்தபின்
சித்தம்பெருகிடச்சேர்த்திடுஞ்செப்பிலே ௯௱௰௭

செப்பிலடக்கித்திடமாய்ப்புடமிடு
ஒப்புரவாகவுருகித்திரண்டிடும்
அப்புறந்தங்கமுருக்கிடைசேர்த்துநீ
மெய்ப்பாய்க்குகையில்விரும்பியுருக்கிடே ௯௱௰௮

உருக்கியசத்துருடனின்றதங்கமும்
நெருக்கியுருக்கிநேராய்க்களங்கமாந்
திருக்கியகளங்கைச்சேர்த்திடுவெள்ளியில்
பெருக்கியமாற்றுப்பேசவொண்ணாதே ௯௱௰௯

ஒண்ணாகளங்கமுடைத்துநொறுக்கியே
கண்ணானகெந்தியுங்காரமும்வீரமும்
திண்ணமாய்க்கூட்டிச்சேர்த்தரைவித்தாவில்
உன்னிவழித்துவுருட்டித்திரட்டிடே ௯௱௨௰

திரட்டிரவியிலுலர்த்திக்காய்ந்தபின்
உருட்டியேசெப்பிலொடுக்கிப்புடமிடு



நெருட்டிமடக்கிநேராய்ப்பொருமியே
சிறந்துசிவந்துசெந்தூரமாகுமே ௯௨௧

ஆகுஞ்செந்தூரமனவற்றவேதையாம்
பாகுடன்நீயும்பணவிடைமண்டலம்
வாகுடன்கொண்டிடநந்தைதிறந்திட
தேகந்நிலைத்துத்திறமாங்கெவுனமே ௯௨௨

உவருப்புச்செந்தூரம்

திறமாயுவருப்பில்சிவக்குமுறைமைகேள்
திறமானலிங்கமும்நேர்பச்சைதாரமும்
உறமாமயத்தொட்டியொடுங்கியகெந்தியும்
வரமானகாரமும்வல்வீரங்கூட்டிடே ௯௨௩

கூட்டியொன்றாகக்குமுறப்பொடித்துநீ
நாட்டுவாய்நீரில்நன்றாய்ப்பிசிரியே
ஊட்டிகமாகத்தானயச்சட்டியில்
போட்டுநிலையாய்ப்பொருந்தவறுத்திடே ௯௨௪

வறுத்திடும்போதில்வளமாய்க்கறுத்திடுங்
கறுத்திடுஞ்சாக்குக்கருத்தாய்வெளுத்திடு
நிறத்துடன்வெளுத்துநின்றுசிவந்திடும்
திருத்தமாய்ச்சிவந்துசெந்தூரமாகுமே ௯௨௫

ஆகுஞ்செந்தூரமாருமறிந்திலர்
பாகுடனண்ணல்பருத்தமுறையிது
வாகுடன்வெள்ளித்தகட்டில்மருவியே
ஆகமாய்ச்சாம்பலில்அழுத்திப்புடமிடே ௯௨௬

அழுத்திப்புடமதிலாறியெடுத்திட
பழுத்திடும்வேளைப்பார்க்கக்கண்கூசிடும்
கொழுத்திடும்லோகமுங்கண்டிப்பழுத்திடும்
வழுத்திடச்சொல்வாக்கிதுசித்தமே ௯௨௭

சித்தம்பெருகிச்செனிக்குமெண்ணுமாதை
உத்தமரிடத்தில்உகந்துநீபேசிடு

மத்தியமானமாத்தரிடத்தினில்
சற்றுமிராதேதன்னிலைபற்றிடே ௬௨
தன்னிலைபற்றித்தானமிர்ந்துநீ
உன்னியொடுங்கியுறுதியில்நின்றிட
விண்ணிலேதன்னிலேவேதமேநூன்மணி
செவ்வியினுடுவேசிறந்திடுந்திடமே ௬௩

கோடாசூரி

சிறந்தரவியில்சிறக்குஞ்சரக்கை
மறந்துவிடாதேயகரகோடாசூரியும்
அறந்தருங்கார்முகிலாலதிமுறுவலும்
திறந்திடுங்கெந்தியுமலிங்கமுமானதே ௬௪
ஆனசரக்குஅஞ்சுஞ்சரியிடை
கோலவனருளால்கூட்டிப்பொடித்திடு
தானமாம்வெங்கலத்தகட்டில்பரப்பியே
பூணவேசெயநீர்ப்பொருந்தத்தெளித்திடே ௬௫
தெளித்துரவியில்சுருளவுணர்த்திடு
வழித்ததைகட்டிவாயினீர்விட்டுமே
அழுத்திப்பிணைத்துஅழுக்கிரவியினில்
கழித்ததுகாந்தியில்சுழன்றுபுகையுமே ௬௬
புகைந்துகருகிப்பொலிவாய்சிவந்துதான்
தகந்துபொருமித்தழன்றுசெந்தூரமாம்
உகந்ததெடுத்துவுரிமையாங்குப்பியில்
அகந்தனிலுயிர்போலன்புடன்போற்றே ௬௭
போற்றியவெள்ளியில்பூசிப்புடமிட
தோர்த்திடதாகநோய்ப்பழுக்கிடும்
ஆத்தியசெம்பிலழுக்கியுருக்கிட
தேத்தியமாற்றுத்திருவருளாகுமே ௬௮
திருவாம்ரவியில்சிவந்தசெந்தூரத்தை
உருவானதேகத்திலூட்டிப்பணிவிடை



தருவான்இல்லத்துள்ளுதொருநாளும்
கருவானவாசிக்கவராதிருக்குமே ௬௯
இருக்குமேதேகமெத்தநாளாகிலும்
திருக்கறச்சத்திசிவத்தைப்பணிந்திடு
பெருக்கியவாசிநேராய்வணங்கிடும்
திருக்கண்டகண்ணுக்குள்திவினையில்லையே ௭௰
தீவினையானசிந்தைதிடப்படும்
காவியவாசித்தாண்டவெதாருநாளும்
கூவியஅண்டங்குரியாஞ்சழியினில்
மேவியேதாண்டிவிளக்கொளிகண்டிடே ௭௧

[பற்பம்]

கண்டிடுபற்பங்கருணையாலக்கிட
விண்டிடக்கேளுவிளங்கியவீரமும்
திண்டிறாகமும்நேரானலிங்கமும்
அன்றியகாரமுந்தலங்குஞ்சலாசத்தே ௭௨
சத்துமுதலாய்த்தானோர்சரியிடை
பத்தியொன்றாகப்பதியப்பொடித்திடு
வெத்தியாஞ்செயநீர்விட்டுஅரைத்துமே
முத்தியாஞ்சாமம்மூவிரண்டாட்டிடே ௭௩
ஆட்டிவழித்துஅடைபோல்பிடித்துநீ
காட்டிரவியில்காடுகவுலரவே
நாட்டியவில்லைநன்றுபவர்ந்தபின்
பூட்டிடுகூட்டில்பொருந்தமணவிடே ௭௪
மணவிட்டுவர்த்திவாகாய்ப்புடத்தினில்
அணவிட்டுத்தாவியதிரவொளுக்கபின்
மணவெடுத்துநீயும்வணங்கியெடுத்திட
தனைஇற்றவெண்மையாய்த்தானதுபற்பமே ௭௫
பற்பமதனைப்பதிவாயெடுத்திடு
அற்புதவெள்ளிதனைப்புடமிட

ஞாப்பரவாகத் தூலக்கப்பமுக்கிடுந்
செப்பியலோகமுஞ்சேரப்பமுக்குமே ௬௪௨

பழுக்கிடுமிப்பற்பப்பனைவிடைகொண்டிட
நெளிக்கிடுந்தேயுர்நின்னாடிலைத்திடும்
கருக்கினில்வாசியுங்குரலினில்சென்றிடும்
முறிக்கிருகண்ணுமுனையிலிற்புக்குமே ௬௪௩

[நாகபற்பம்.]

புக்கியநாகம்பொருந்தியபற்பமாய்
சிக்கெனச்சொல்லுமேவஞ்செய்வமையதாகவே
தக்கபெரசமுந்தாரமும்வீரமும்
தொக்குஞ்சவ்வசந்துனைனயானகாரமே ௬௪௪

காரமொடொன்றாய்க்கசிக்கவரைத்திடு
வாரமாய்நீரில்வழித்துவுருட்டியே
ஈரமகண்டஇரவியில்வைத்திடு
சாரவேயோட்டில்தனிக்குமண்சிலையே ௬௪௫

சிலைமுக்கிக்கிறமாயுலர்த்தபின்
வாலையைப்போற்றிவைபுடந்தவ்விலே
சூழவரித்தச்சுமன்றனரித்தபின்
ஆலயமாகஅர்ச்சித்தெடுத்திடே ௬௪௬

எடுத்திடுமல்லிகையினையானபற்பமாய்
தொடுத்திருக்குஞ்சுகமாயெடுத்திடு
அடுத்தசேர்பற்பம்ஆகிருகுவிரா
முடித்தபொருளிலுமலாய்பொருளிதே ௬௪௭

பொருளாயபற்பம்பொருந்தஎடுத்துநீ
அருளானவெள்ளியிலனைத்திடுந்நன்றா
குருவானதங்கங்குலையாதொருநாளும்
இருளானசெம்புமமுமாகுமே ௬௪௮

ஆயபற்பமிதிலோர்பணவிடை
பாருடன்தேனிலிப்பிலையுடன்கொள்ளம்



வாகுடன்கொண்டுமனதைநிறுத்திட
தேகம்வலுத்துச்சிவயோகம்புக்குமே ௬௪௯

[தாரபற்பம்]

புக்கியதாரம்பொருந்தியபற்பமாய்
நிற்கும்வகைகேள்நேரானபற்பமும்
தக்கியநாகமும்தான்ரசபச்சையுந்
திக்கியசந்தொடுசேர்காரங்கூட்டியே ௬௫௰

கூட்டிக்கல்வத்தில்குமுறப்பொடித்துநீ
மூட்டியநீரில்பொருந்தஅரைத்திடு
நாட்டியவைத்துநன்றாயுருட்டியே
வாட்டிரவியில்வலுக்கஎடுத்திடே ௬௫௧

எடுத்திடுஉண்டையிதமானஓட்டினில்
தொடுத்திடுஞ்சிலைமண்சுருக்காயுலர்த்தபின்
விடுத்திடுபுடத்தில்விரும்பியெடுத்திட
அடுத்ததோர்பற்பமதில்வெகுவேதையே ௬௫௨

வேதைச்சரக்குவிரும்புமுபாசம்
சாதிச்சரக்குத்தருகாரசாரமும்
நீதிச்சரக்காய்நிலைத்தபாஷாணமும்
ஆதிச்சரக்குஅனைத்தையுங்கண்டிடே ௬௫௩

[செயநீர்]

அனைத்தையுங்கண்டுஅதில்சத்தெடுத்திட
புனைத்திடுஞ்செயநீர்ப்புதுமையாய்க்கேட்டிடு
நினைத்திடுமண்டமும்நேரானபிண்டமும்
இனைத்துடன்வகைக்குநீசேர்பலமொன்பதே ௬௫௪

அன்புடன்கூட்டிஅமிழ்த்திடுபாண்டத்தில்
நன்புடன்தன்னில்நாட்டுமெருந்துகேள்
பண்புடன்வீரமும்பாஷாணப்பச்சையுந்
தன்படுநூரமுந்தன்னொடுகாரமே ௬௫௫

காரமுஞ்சாரமுங்கருவானதேனும்
பாரன்னபேதியும்பகுத்திடுந்தாந்தமும்
சிறுவுளகெந்தியுந்திருவானதாரமும்
கூருள்ளகார்முகில்குவிந்தயத்தொட்டியே ௬௫௬

தொட்டியுடனேசூழுமின்பருங்
கெட்டியாய்க்கட்டுங்கெம்பீரகம்பியுந்
திட்டமாய்க்கண்டுசேர்பதினைஞ்சுகமே
மட்டமதாகவலகையஞ்சுபலமெட்டே ௬௫௭

எடுத்துப்பொடித்துவரண்டப்பானையில்
தொடுத்ததொன்றுகச்சுருளப்பிசைந்துநீ
கடுத்திடுமெழுரியுங்காரமுங்கூட்டியே
அடுத்திடுமருந்திலடவிட்டுக்கிண்டியே ௬௫௮

கிண்டரவியிற்கொவிதமாய்த்தாங்கவே
கண்டுநீவைத்திடுகதிரவனொளிபட
நின்றதன்றுகநிகழநீகிண்டிடு
கிண்டிமருந்துசோர்வறக்கண்டுமே ௬௫௯

கண்டுமருந்தைச்சுகமாயடுப்பினில்
கண்டிதமாகக்கடுகெரித்திடு
மண்டியேபோர்பக்கமனதாளரித்திட
நன்றானகல்லனமாம்நான்சொன்னசாரமே ௬௬௰

காரம்பொடித்துதயவானகல்வத்தில்
காரமோடொன்றாய்க்கடுகக்கலந்துநீ
பாரப்பனியில்படியாய்நீவைத்திட
வாருஞ்செயநீரொருங்காதகெங்கைபே ௬௬௧

கெங்கையாய்நின்றசேணிநீர்தன்னிலே
மங்காதுபாசம்வளர்தாரசாரமும்
பொங்கும்பாஷாணமும்பொருந்தியலோகமும்
அங்கமாய்நீமுத்தியிலுருக்கிடே ௬௬௨



உருக்கிடுசத்தாயுருகிநிலைத்திடும்
பெருக்கின்றசெயநீர்பெருமையின்றன்மையால்
கருக்கண்டுமுடிக்கக்காசினிதன்னிலே
இருக்கின்றபேரிலெனக்கோடிக்கொன்றுமே. ௬௬௩

கோடியிலொன்றாகுருபுக்கிரமநிர்ணயம்
நாடியெடுத்துரையமாயெண்ணூற்றினில்
பாடியசொற்படியயனறிவானய்யா
தேடியசத்திதெளிவதைக்கேட்டிடே. ௬௬௪

சத்தில்தெளிவு.

கேட்டுகெருடப்பச்சைபைமைந்தனே
நாட்டியநீரில்நன்றாயரைத்ததைத்
திட்டிவழித்துத்திறமாயுருட்டிநீ
பூட்டியவோட்டில்பொருத்தமன்செய்திடே.

செய்திட்டுலர்த்தித்திறமாய்ப்புடத்தினில்
கொய்திட்டெடுக்கக்குருவானபற்பமாம்
மெய்திட்டமாகிவிளங்கியபற்பத்தைக்
கைதிட்டமாகவேக்கருவினில்கொண்டிடே. ௬௬௬

கொண்டுமண்டலங்குருவைநினைந்துநீ
நின்றிடும்போதுநீர்திசைதன்னிலே
சென்றிடவிஷங்களுந்திறமாம்பலைகளும்
கண்டிடும்போதினில்கதறிநடுங்குமே. ௬௬௭

நடுங்கிவிஷங்களுந்நாடாதொளித்திடும்
ஒடுங்கிநீயிருக்கஊரில்விஷமுண்டோ
திடங்கொண்டகெருடன்முட்டைக்கருவினில்
படங்கொண்டெழுந்தமாநாகஞ்சித்தியே. ௬௬௮

சித்தானநத்தைசிப்பிபெடுத்துநீ
ஒத்தாசையாகவுடன்சேருசத்தியை
முத்தானநீரில்முழுகயுலர்த்துமே
பத்தாலைகொண்டுபெருவில்லைபண்ணிடே. ௬௬௯

பண்ணியுலர்த்திபருவமாயோட்டினில்
வுண்ணியேமூடியுறகிமணவிடு
சென்னியைநோக்கிசிறக்கப்புடமிட
புண்ணியமாகப்பொருமிநீறுகுமே. ௲௭௰

நீரானபற்பம்நேர்மைவெகுவிது
பாரானபாலில்பணவிடைகொண்டிடு
நேராகமண்டலந்தினைத்திடுரெண்டினில்
சீரானநாக்குசிவிஞக்காகுமே. ௲௭௧

நாக்குமெதுநாய்நலமாயிருந்திடும்
வாக்குமொழிகள்வளமதுமெத்தவாம்
தாக்குமமுர்தந்தானேசொலித்திடும்
தூக்கியதூக்கஞ்சுழன்றவொடுங்குமே. ௲௭௨

ஒடுங்கியஆமைஓடதெடுத்துநீ
அடங்குமமுரியிலன்புடன்சுத்திசெய்
மடங்கியேயோடும்வளர்சத்திபூரமும்
திடங்கொண்டனாத்துசேர்த்துவுருட்டிடே. ௲௭௩

சேர்த்துவுருட்டித்திடமாய்ரவியினில்
பார்த்துவுலர்ந்தபின்பண்புடனோட்டினில்
சாத்திமேல்மூடித்தனதாய்மணவிடு
வாத்திப்புடத்தில்வரிசையாய்வைத்திடே. ௲௭௪

வைத்திட்டெடுக்கமோசற்றநீறுபோல்
மெத்திட்டமாகவிளங்கியிருந்திடுங்
கைத்திட்டமானகருவானபற்பத்தை
செய்திட்டகுருவென்றுதேர்ந்துபணிந்திடே. ()

தேர்ந்துபணிந்துதினமோர்பணவிடை
நேர்ந்துதேன்பாலில்நினைவாய்ப்பொசித்திட
கூர்ந்தொருமண்டலங்குணமாயெடுத்தபின்
சார்ந்திடுமேனியுந்தளராதிருக்குமே. ௲௭௬



தளராதுவாசிதான்மனவேகமாய்
மலரானபூமிமண்டலஞ்சுற்றலாம்
சுழலாதுவாசிகண்ணொளிகூர்மையாம்
சுழலாமல்காதஞ்சொல்நோடிசுற்றுமே. ௲௭௭

சுற்றதில்அத்திசுருதிமுடிவுகேள்
பற்றியாங்கேசரிப்பருமுத்துகஸ்த்தியும்
சித்தியாய்செண்டில்செலுத்தியமுரியில்
வெற்றியாய்க்காச்சிவிரும்பியுலர்த்திடே. ௲௭௮

உலர்த்திப்பொடித்துவுடன்சேர்காரியமும்
நிலர்த்தமுர்தமுண்டநோசபிசமும்
குலத்துடன்மூன்றையுங்குருவானநீரதில்
பிலத்துடனாத்துப்பேணியுருட்டியே ௲௭௯

உருட்டிப்பதிவாயோட்டில்மேல்சிலைசெய்
கருத்துடனிதானங்கண்டுபுடமிடு
திருத்தமாயந்தத்திறமாய்வெளுத்திடும்
நிறுத்தநிறையாய்நின்றமேயாகுமே ௲௮௰

பாரானபற்பம்பணவிடைதேனில்
சீராகக்கொண்டுசென்றிடுமண்டலம்
நேராகமண்டலம்நின்றத்திடும்போதினில்
போரானதேகம்பிலத்துவளுக்குமே ௲௮௧

வளுக்குங்கெதிகேள்வளர்காரிநீசிலை —
செழிக்குமனமுஞ்சித்தையும்பூரணம்
தெளிக்கின்றஅஸ்திநேர்மையுங்கூடினால்
சுழிக்கின்றவாசிதுள்ளாதடங்குமே ௲௮௨

## சுக்கான்பற்பம்

அடங்கியசுக்கானின்றமெத்தவாம்
முடங்கியகல்லுதிரப்பொடித்துமே
அடங்கியநீரில்தோணப்பிசரியே
திடங்கொண்டேர்த்தித்திறமாய்ரவியிலே ௲௮௩

ரவியிலுலர்த்திநாலஞ்சனைகமுறை
புவியாளகல்லுப்புகருடஞ்சுத்தியாய்
குவியாஞ்சதாசத்துகூட்டத்தில்சத்தியும்
அவியாதமூன்றுமளவிடையொன்றதே ௱௮௪

ஒன்றாகக்கூட்டிநூறுநீர்விட்டுமே
நன்றாகஆட்டிநாடியுருட்டிடு
குன்றாரவியிற்குணமாயருட்டியே
பண்டானஓட்டில்பற்றிமங்கிலையே ௱௮௫

மன்னனாறிசைப்புவனங்கிப்புடமிடு
தன்னிமையாகத்தருவானபற்பமாம்
உன்னியபற்பம்ஒருக்கர்பித்திலார்
புன்னையநாதம்போகுத்தான்கண்டிடே ௱௮௬

கண்டிதமானசுருஞ்சுக்கான்பற்பத்தை
கண்டியேநெய்யில்சுகமாய்ப்பணவிடை
கொண்டிடில்தேகங்குளிர்ந்துவலுவதாய்
மண்டியவித்துமார்க்கமாய்க்கட்டுமே ௱௮௭

கபாலபற்பம்

கட்டியவோடுகெடியகபாலமாம்
சுட்டதின்சத்தைச்சுகமாயெடுத்திடு
திட்டமதாகச்சேரசத்தியும்
வட்டமாய்மூன்றும்வகைசரிதானேடே ௱௮௮

தானேயெடுத்துதருகெங்கைநீரிலே
பூணவேதட்டிப்பொருந்தஅரைத்திடு
பேணியரைத்துப்பெலமாயுருட்டியே
காணரவியில்கடுகவுலர்த்திடே ௱௮௯

கடுகவுலர்த்திகதிக்கமங்கிலைசெய்
தொடுக்கிபெருவில்சுகமாய்ப்புடமிடு
அடுகியசத்துஆகவெளுத்திடும்
மடுகியபற்பமாகில்லாப்பற்பமே ௱௯௰



பற்பமதனைப்பதியமனதினில்
அற்புதமாகஆசிப்பணவிடை
சிற்பமாநோக்கிசெலுத்திடுதேனினில்
உற்பனமாகியுறுதியாந்தேகமே ௱௯௧

தேகமுறுதிதிறந்துவலுத்திடும்
பாகமாய்நேத்திரம்பதியத்தெளிவதாம்
ஆகமாய்த்தூரத்திலதனைஅறியலாம்
தாகமாய்த்தீபந்தானேதுலங்குமே ௱௯௨

கல்நார்பற்பம்

துலங்கியகல்நார்சுகமதுமெத்தவாம்
இலங்குகல்தாரையிடித்தாவின்பாலினில்
விளங்கவேபோட்டுவிரும்பியெடுத்திடு
நிலங்கொண்டநாரதுநின்றதுசுத்தியாம் ௱௯௩

சுத்திதன்னோடேசுகமாஞ்சலாசத்து
வெற்றியாய்பூரம்விசைகாசுகட்டியும்
பற்றியாய்நாலும்பதியஒன்றாகவே
சித்தியாம்நீரில்சிறக்கஅரைத்திடே ௱௯௪

அரைத்துவுருட்டிஅலரவுலர்த்தபின்
திறத்துடனோட்டில்செலுத்திமன்பூசியே
உறுத்துடனெருவில்ஒடுக்கிப்புடமிட
நிறத்துடனாறுநீறிவெளுக்குமே ௱௯௫

வெளுத்திடும்பற்பம்விரும்பியெடுத்துநீ
அழுக்கறப்பல்லைஅழுத்திவிளக்கிடு
நெளித்திடும்பல்லுநேராயிறுகியே
வலுத்திடுந்தந்தம்வலையினிக்கேட்டிடே ௱௯௬

கேட்டிடுமைந்தாகெட்டியாங்கல்களை
நாட்டியேபல்லில்நன்றாய்நொறுக்கலாம்
நீட்டியகல்நார்திறமதுநன்மையால்
ஆட்டியபல்லுமசையாதிருக்குமே ௱௯௭

இருக்குங்கபத்தையிதமாயறுத்திடும்
மருக்கியபித்தமுட்வாய்நாறல்போய்விடும்
சுருக்கியவிந்துவுஞ்சுகமாய்சொலித்திடும்
திருக்கறப்பார்த்துசெய்துமுடித்திடே ௬௮

சலாசத்துபற்பம்.

முடித்திடக்கேளுமுன்யாஞ்சலாசத்தை
தொடுத்ததன்னீரில்சுறுக்கெனக்காச்சிட
கடுத்தசுத்தியாங்கருவாயதன்றொடு
வெடித்திடுமுப்புமேல்வீரங்கூட்டிடே ௬௯

கூட்டியரைத்திடுருவானநீரிலிஸ்
நாட்டிவழித்துறலமாயுருட்டியே
ஓட்டிலில்வைத்துவோடுக்கிமணலிடு
தாட்டிகமாகத்தனத புலர்த்திடே. ௭௰

உலர்த்தியெடுத்துஉல்ரமையைப்போற்றியே
பிலத்துடனொருவிஸ்பேணிப்புடமிடு
குலத்துடன்சத்துங்குணமாவெளுத்தது
பலத்தினிலதிகபற்பமதாகுமே ௭௧

ஆகியபற்பமருந்துபணவிடை
வாகுடன்மண்டலம்வருந்தியுணர்ந்திட
தேகம்பெலத்துகிறுகதிரோடிடும்
பாருடன்தேகம்பளீரெனத்தோணுமே ௭௨

தோணுமொளியுஞ்சுடரொளியொப்பென
காணுமேமூலங்கருணையில்வாசியில்
பேணுமென்றுறாறும்பெலமானமந்திரம்
வேணுமென்றெண்ணிவிரும்பியறிந்திடே ௭௩

முத்துச்சுண்ணம்.

அறிந்திடச்சித்துஅனேகவித்முண்டாம்
சொரிந்திடுமுத்தின்தொழிலதுகேட்டிடு



பரிந்திடுமுத்துப்பருவெடிப்புடன்
விரிந்திடும்பூரமேலானவீரமே ௭௪

வீரமாய்நாலும்விளங்கவொன்றாகவே
காரமாம்நீரிற்கடுகஅரைத்திடு
பாரமாய்நாலுசாமம்பயின்றபின்
சிராய்வழித்துத்திடமாயுருட்டிடே ௭௫

உருட்டியுலர்த்தியொடுக்கிப்புடத்
திருத்தமாய்அன்னம்திரமாயிருந்திடும்
நிறுத்துப்பணவிடைநினைவாகமண்டலம்
கருத்துடன்கொண்டிடில்காரணங்கேட்டிடே ௭௬

கேட்டிடுமைந்தாகிருபையாநேத்திரம்
நாட்டியமாசிறன்றாய்விலங்கிடுந்
தோட்டியதூரந்தொலையுந்தெரித்திடுந்
தேட்டெனப்பகல்நட்சத்திரந்தெரியுமே ௭௭

தெரியும்பகலதுதிறமதுகேட்டிடு
நெறியும்பழத்தில்நேர்மையால்சுத்திசெய்
தரியமாமுத்துச்சுண்ணமுங்கூட்டியே
விரிவுள்ளநீரைவிட்டுஅரைத்திடே ௭௮

அரைத்ததுருட்டிஅறுவதுமுன்போல்
நிறத்துடன்புடமதில்சென்றுவெளுத்திடும்
நிறத்துடன்வெளுத்துநின்றதுசுண்ணமாம்
வரத்துடன்குருவைநீவணங்கிமகிழ்ந்திடே ௭௯

வணங்கிப்பணவிடைமாசற்றதேனினில்
இணங்கிநீமண்டலமிருந்துபொசித்திட
குணங்களோர்மலதாய்க்கூட்டிநினைந்துநீ
மனங்கள்குவித்திடவந்ததுசித்தியாம் ௮௰

கோமேதகச்சுண்ணம்.

சுத்தியாங்கோமேதகமீதில்சித்திகள்
முத்தியாய்நின்றமுறையதுசொல்லுவோம்

சித்தியாங்கோமேதகமதனைநெய்யினில்
பத்தியாய்க்காச்சிப்பாலிற்கழுவிடே ௭௱௰௧

கழுவியெடுத்துக்கற்பூரங்கம்பியும்
பழுதறவுமொன்றாய்ப்பார்த்துச்சரியிடை
வழுவறக்கூட்டிவாய்நீர்விட்டுமே
தொழுதுநீயாட்டிக்கண்டவழித்திடே ௭௱௰௨

கண்டொழித்துக்குருளையுருட்டிநீ
நன்றாய்ஓட்டில்நாட்டிமணலிடு
சென்றதுகாய்ந்ததுசிறுகப்புடமதில்
நின்றதுவெந்துநிலைத்திடுஞ்சுன்னமே ௭௱௰௩

சுன்னமெடுத்துச்சுகமாய்ப்பணவிடைப்
பன்னியகலசப்பாலிற்பொசித்திட
துன்னியதேகஞ்சுகவச்சிரகாயமாம்
விண்ணுபர்வாசியும்விசையினிற்செல்லுமே ௭௱௰௪

செல்லுமேவாசிநீயதனியில்
நல்லுறவாகநடத்துறவாடியே
அல்லும்பகலுமலைகடல்நன்னிலே
அவ்விநடந்ததுயில்வருதின்னமே ௭௱௰௫

புஷ்பராகச்சுன்னம்.

திண்ணமாய்ப்புஷ்பராகத்திறமது
பண்ணியநெய்யிற்பணமாய்க்காச்சி
துன்னியவீரமுஞ்சூடனுஞ்சத்துமே
எண்ணியேநாலுமியல்பாளெடுத்திடே ௭௱௰௬

எடுத்திட்டவாத்துறுகமானநீரினில்
பிடித்திடுவெட்டத்தில்பேணியலர்த்திடே
தொடுத்திடுஓட்டில்சுத்திமணலிடு
நடுத்தரமாகநாட்டிப்புடமிடே ௭௱௰௭

நாட்டிப்புடத்தில்நயமாயெடுத்திடு
நீட்டியபற்பஞ்செம்மையதாகிடும்



தாட்டிகமாகச்சமத்தாய்ப்பணவிடை
தேட்டுடன்நெய்யில்செலுத்தியிருந்திடே ௭௱௰௮

இருந்திடமண்டலமென்றுசொல்லுவேன்
பருந்திடும்பூமிபாதாளந்தோணுமே
செறிந்திடும்புஷ்பராகத்தொழிலிது
அறிந்துநீபார்த்துஆதியைப்போற்றிடே ௭௱௰௯

வயிரச்சுன்னம்

போற்றும்வயிரப்புதுமையைக்கேட்டிடு
சாத்தும்வயிரந்தனதாயெடுத்துநீ
நீத்துப்வலகையின்நிருணயஞ்சொல்லுவேன்
பார்த்திடுவீரமும்பதிவானபூரமே ௭௱௨௰

பூரமுங்கம்பியும்பொதுவானவெள்ளையும்
கூருடன்நாலுங்குணமாயெடுத்துநீ
சாரமாநீரில்தலைதாயனைத்ததை
பார்சிறுகுகையாய்ப்பருவமாய்ப்பண்ணிடே ௭௱௨௰௧

பண்ணியகுகையும்பதிவாயலர்த்தபின்
உன்னியவயிரமுள்ளடக்கியே
துன்னியசில்லுஞ்சுகமாய்ப்பொருத்தியே
மண்ணதுபூசிவலுவாயுலர்த்திடே ௭௱௨௰௨

உலர்த்திப்புடமதுறுதியாய்வைத்திடு
நிலத்துடன்வயிரமாம்நீறிவெளுத்திடும்
குலத்துடன்குகையுங்கூட்டிப்பொடித்துநீ
பலத்துடன்குருவைப்பேணிவணங்கிடே ௭௱௨௰௩

வணங்கியபற்பம்வாருதிநாதமாம்
இணங்கியகலசப்பாலிலிவித்துடன்
குணங்கலோர்மனதாய்க்கூர்ந்துபணவிடை
மனங்குவித்தன்புடன்வணங்கிப்பொசித்திடே ௭௱௨௰௪

பொசித்திடுமண்டலம்பூரணமாகவே
வசத்திடுந்தேகப்வலுவதுமெத்தவாம்

நசித்திடும்வாசிநடுநிலைபுக்கிடும்
திசைக்கதிராசனுஞ்சித்தனுமாவனே. ௭௨௫

பச்சைச்சுன்னம்.

ஆனதோர்பச்சைஅதினுடன்வீரமும்
தோணநல்பூரமுந்தொடுத்ததுமூன்றையும்
பேணச்சரியிடையிலமாயெடுத்துநீ
பூணநீர்விட்டுப்பொருந்தஅரைத்திடே. ௭௨௬

அரைத்துமெழுவாயடைபோலுருட்டியே
நிறத்துடன்ரவியில்நினைவாயுலர்த்தபின்
நிறத்துடனோட்டில்செம்பிமணைவிடு
வரத்துடன்புடத்தில்வைத்தனல்சாத்திடே. ௭௨௭

சாத்தியபுடமதில்தணலாறினபின்
தேத்தியபச்சைநிறமுடனிதியே
போத்தியபற்பம்பூரணமாகிடும்
வாத்தியெடுத்துவணங்கிப்பூசியே. ௭௨௮

பூசித்துமைந்தாபூரணத்தன்னிலே
நேசித்துநீயும்நினைவாய்ப்பணவிடை
ஆசித்துவந்தஅரனைவணங்கிட
மாசற்றதேகப்வலுவாயிருக்குமே. ௭௨௯

இருக்குமேதேகமினியாதொருநாளும்
அறுக்கும்படையிலலைந்துதிரிகையில்
நெருக்கியவெட்டுநோய்ப்பொருத்திடுஞ்
சுருக்கியபச்சைத்தொழிலதுநன்மையே. ௭௩௰

நீலச்சுன்னம்.

நன்மையாய்நீலந்தானதுவங்கியமாம்
உண்மையாய்மனதுள்ளொடுங்கியவீரமும்
செம்மையாங்கம்பியஞ்சோரிலண்டமும்
தன்மையாநாலுஞ்சரியிடைநாலெடே. ௭௩௧



தானதெடுத்துதனதானநீரினில்
பேணவேயரைத்துப்பெருகவுருட்டியே
ஊணவேயோட்டிலுருகிமண்சீலைசெய்
தோணவுலர்த்திச்சுகமாய்ப்புடமிடே. ௭௩௨

புடமதுகனைக்காய்ப்போட்டெடுத்திடு
திடமுள்ளநீலஞ்சிவந்துவெளுத்திடும்
அடவுடன்மெழுகதுஅழகுமேசுன்னமாம்
விடமதின்கொடியவெண்சுன்னமாகுமே. ௭௩௩

சுன்னமெடுத்துசுகமாய்ப்பணவிடை
தின்னமாய்த்தேனில்செலுத்திடுமண்டலம்
வன்னியவாசியோடாதொடுங்கிடும்
புன்னியசுன்னம்புதுமையைக்கேட்டிடே. ௭௩௪

கேட்டிடுமைந்தாகெளியாவுலகினில்
நாட்டிகமானதன்னுயிர்பயிர்களும்
தேட்டிமையாகச்சேரவசியமாம்
பூட்டியநீலப்புதுமையின்நன்மையே. ௭௩௫

வயிடூரியச்சுன்னம்.

நன்மையாய்நின்றநடுவயிடூரியஞ்
செம்மையாய்த்தேனில்சேர்சிவசத்தியும்
வன்மையாய்வீரமுடனதிலண்டமுந்
தன்மையாயஞ்சஞ்சரியிடையாக்கிடே. ௭௩௬

தாக்கிப்பொடித்துச்சுகஅண்டநீரினில்
தாக்கியமைத்துத்தனதாயுருட்டிடு
பாக்கியமாகப்பதியப்புடத்தினில்
வாக்கிஞ்சொல்லிலைவைத்தனல்மூட்டிடே. ௭௩௭

அனலதுமூட்டிஆறியெடுத்திடு
நினைவுடனெஞ்சுந்நோய்வெளுத்திடும்

குணமுடன் வெளுத்தகூடிய பற்பமாம்
மணமுடனீயும் வணங்கியெடுத்திடே. எகூஅ

எடுத்திடு பற்பமியல்பாய்ப் பணவிடை
தொடுத்திடு மண்டலஞ் சுகமாய் முரியில்
கடுத்திடும் வாசிகலங்கும் தொருநாளும்
முடித்திடுந் தேகமுழுதுஞ் சித்தாகுமே. எகூகூ

சித்தெனமைந்தா செப்புவேன் கேளு
வித்தானமூலிகை விசையாங் கிழங்குகாய்
ஒத்தாசையாகவும் பார்க்கமூர்த்தமாம்
பத்தாசை கொண்டு பார்ப்போர்க்கிலிக்குமே. எசாய

இனிக்குஞ்சிகப்பை யெடுத்துப் பொடித்துநீ
அணிக்கின்றவிரமும் அண்டமுஞ் சேர்த்துநல்
பனிக்கொண்ட நீரில் பதியவரைத்துமே
தொனிக்கின்றவட்ட முருவள் பிடித்திடே எசாக

பிடித்திடு வோட்டில் பேணிமணலிடு
கடுத்திடு நாவியில் காய்த்தெடுத்துநீ
தொடுத்திடும் படக்கில் தானெனவெளுத்திடும்
விடுத்திடும் பற்பம் விசையான பற்பமே எசாஉ

பற்பமெடுத்துப் பாலில் பணவிடை
உற்பனமாக வூட்டிடு மண்டலம்
கற்பமதாகிக் காயஞ் சிவத்திடும்
அற்புதமாகி அசையாதுவாசியே எசா௩

அசையாதுவாசியது சிவயோகமாய்
இசையான நிட்டையிதுலங்கிடும்
வசையானலோகம் வணங்கியுன்னிடம்
பிசகாதிருக்கும் பெருமைகள் மெத்தவே எசா௪

பெருமைசிறந்திடும் பேருமென்னூற்றை
யுருமையாய்க் கன்றுவுள்ளம் புகூர்த்திட



திருத்தியவாதத்தினமத்தைமெத்தவாம்
அறித்திடவைப்பார்த்துமாகும்பயில் தின்றிடே எரு

நின்றபாஷாணம் நிலைத்திடுங் குருக்களை
விண்டிடக் கேளு விசையானபூபதாலே
கண்டிடு தொட்டிகாருமில்ஙின்வியும்
நின்றிடும்பவளப்புத்துநிலையிதே எருகூ

நிலமானதுப்புநேரான்கெவுரியுங்
குலமான வெள்ளைக்குதிரைப்பல் கோமுகம்
மலமான கோழித்தலையானகெந்தியும்
நலமாகியுவெல்லாம் நாட்டிய தப்பிதே எருச

நாட்டிய தேய்வுநலமானகெந்தகந்
தேடியதேரிலைதிருவரிதாரமுங்
கூட்டியவீரமுங் கூர்செப்புத்தொட்டியும்
பாட்டினில்நெல்லும் பதிவானதேய்விதே எருஎ

பதிவானவாய்வுபகர்சாரங்கண்டரும்
கெதியான சிங்கமுங் கடியஞ்சபட்டியும்
நிதியாங் கெவுரிமொத்தபாஷாணமும்
விதியானசாரமும் வேண்டியவாய்விதே எருஅ

வேண்டுமோ காசப்பிளங்குநேர்மைந்தனே
தாண்டியருதப்பாஷாணந்தன்னொடு
தூண்டியநாகத்துலங்கு பாஷாணமும்
ஆண்டுகேளுதவெனநாகசமென்னுமே எருள

என்னுமுபாரசமேற்கஞ்சபுத்தான்
வின்னுலகதியவிளங்கிய பூமிகேள்
றுன்னியகாந்தத்துலங்குஞ்சலாசத்தி
பொன்னைப்போகமும் புநாசவர்க்கமே எஞு

வர்த்தமுடனே வருங்காலிரக்கல்
சுத்தமாய்ப்படிக்கமானசாக்கல்

வருமையகன்றமைவுனந்திறப்படும்
பெருமையிலைலஞ்சபூதமறிந்திடே ௭௱௫

அறிந்திடும்பிரிதிவிஆனதோர்சத்தியாம்
விரிந்திடுமப்புவிசையாஞ்சிவமது
நெறிந்திடுந்தேய்வுநேர்சென்னிநாதமாம்
பரிந்திடும்வாய்வுபலவாயநீரதே ௭௱௬

நீராமாகாசம்நிறைந்திடுவிந்துவாம்
பாரனஅஞ்சும்பகுத்தஞ்சபூதமாம்
சீராடறிந்துசிறக்கத்திரமுள்ளோர்
கூரானவாதங்குருமுறைதின்னமே ௭௱௭

தின்னமுமஞ்சுஞ்செப்பும்வகையது
வுன்னியசெயநீருறுதிமுறையிது
செம்மையாய்க்கண்டுசேர்த்துமுடித்திட
பொன்னிமையானபொருளதுபோதமே ௭௱௮

பூதவுப்பு.

போதமாம்உப்புபொருந்தியபூதங்கேள்
நீதமாம்பூமிநிறைந்தகல்லுப்பு
சீதமாமப்பஞ்சேர்சாரசத்தியாம்
வேதமாந்தேய்வுவெடிசவுட்டுப்பிதே ௭௱௯

உப்பானவாய்வுடன்பச்சைவெங்காரஞ்
செப்புமாகாசஞ்சேர்பூரவழலையும்
மெய்ப்பாகக்கூட்டிவிளங்கிமுடித்திட
அய்யாகுருமுறையறிந்துகொள்ளுண்மையே ௭௱௰

உண்மையாய்ப்பூமியொடுங்கியகல்லுமாந்
தன்மையாம்பூதத்தருவானகாரியஞ்
செம்மையாந்தேய்வுசெப்பியசெம்புவாம்
பொன்மையாய்வாய்வுபொருந்துமிரும்புமே ௭௱௰௧

பொருந்துமாகாசம்புகழ்நாதமைந்தனே
வருந்திநீயஞ்சும்வகையாய்முடித்திடு



பத்தமுடனேபதிவாறிவையெல்லாம்
வெத்தியாம்பிருதிவில்விளங்கியபூதமே ௭௱௰௬

விளங்கியஅப்புவிசையானசங்குடன்
துலங்குநண்டோடுகருமுட்டைதத்தையும்
இலங்குங்கிளிஞ்சிலிபலாமைதன்னோடு
பலங்கவிதுவெல்லாம்பாரப்புத்தாவிதே ௭௱௰௭

பாரானதேய்வுபசுரித்திரகோபம்
நேராமயூரம்நின்றநால்நிமிளையுஞ்
சீரானதுஞ்சியலானகொம்புடன்
மாறுநிதுவெல்லாமருளாததேய்விதே ௭௱௰௮

மருளாதவாய்வுமதியானகல்மதம்
இருளானகல்நார்னாலமேபநியுஞ்
சுருளானரோமமுஞ்சக்ராஸ்திரபேதியுந்
குருவாமிதுவெல்லாங்குணமானவாய்விதே ௭௱௰௯

குணமாமாகாசங்கூறுவோம்சூத்தமும்
கினமாயகாந்தஞ்சேர்கணக்காய்ச்சிலை
யினமாம்ரசிதயிலங்குபாஷாணம்
கனமாமிதுவெல்லாங்காணுமாகாசமே ௭௱௨௰

காணவேஅஞ்சுபூதக்கருவுகள்
தோணவுபரசஞ்சுரூக்காரசாரமும்
பேணும்பாஷாணமும்பெருமையினீதில்
புணேவபஞ்சபூதமறிந்திடே ௭௱௨௰௧

அறிந்ததைந்துபூதப்அங்கங்களைந்திட
திருந்தியவாதமுஞ்சேர்வழியஞ்சனம்
பொருந்துமிதுவெல்லாம்பூதத்தடக்கிநல்
விரிந்திடுஞ்சித்துகள்வெளியில்நின்றுடுமே ௭௱௨௰௨

ஆடும்வரிசைஅசவதைக்கேட்டிடு
தேடும்பிரிதிவிசெலத்திலடங்கிடும்

நாடுஞ்செலமதில்நல்தியில்ருந்திடும்
வாடிடுந்தியதுவாய்வினில்சென்றமே ௭௬௬

சென்றதுவாய்வுசேருமாகாசத்தில்
பொன்றியேநின்றுபொருந்தவுணர்ந்திடு
நன்றிதறிந்தால்நாடிநிசரிக்கலை
கண்டெனத்தேகஞ்சுகசித்தியாகுமே ௭௬௭

ஆகுமேசித்தியருமையென்றதை
யாருடன்பார்த்துவரிலசயநிற்றிடப்
பாருடலங்கித்தப்பலித்திடுமைந்தனே
போக்குடல்வரத்தும்புதுமையைக்கண்டிடே ௭௬௮

கண்டதநிந்துகருவினில்நின்றிட
தொண்டர்களுன்னைத்தொழுதுவணங்குவார்
அண்டமும்பிண்டமுமதினுடவாழ்க்கையை
பிண்டத்தில்கண்டுபேணியிருந்திடே ௭௬௯

இருந்திடும்பிண்டமெலிதென்றதினையாதே
விரித்திடுமூலம்வெளியானசோதியில்
பருத்திடும்வாசிப்பரமபதமது
தெரிந்துணர்ந்துவியோகஞ்சென்றிடே ௭௭௦

கபாலதீட்சை

சென்றிடுங்கபாலதீட்சையைக்கேட்டிடு
நின்றிடுமுச்சியில்நிலைவாய்நீயன்றாம்
சென்றிடுநெற்றியிற்சுருளொங்கென்றிடு
கண்டிடுமத்தியில்கலந்துவுங்கென்றிடே ௭௭௧

அங்கென்றமார்பிலமர்ந்திடுசிங்கென்று
வங்கென்றுவுந்தியில்வணங்கியிருந்திடு
சிங்கென்றமூலந்திறந்துவளுத்திடும்
பொங்குங்கபாலம்பொருந்தியதீட்சையே ௭௭௨

பொருந்தியதீட்சையைப்புனிதமதாக
வருந்தியெந்நாளும்வணங்கியிருந்திடு



இருந்தியதேகஞ்சிவகயிலாசமாம்
இருந்திடுமந்தவேகாந்தமாகவே ௭௭௩

ஆகமாயந்தஅருள்சிவசத்தியை
யாகமாய்நீயும்பணிந்துவணங்கியே
ஏகமாய்நின்றஇணங்கியதீட்சையை
தாகமாய்ச்சொல்விசாத்துவிபூதியே ௭௭௪

பூதியைமைந்தாபுனிதமாய்க்கொண்டுநீ
ஆதியைநோக்கிஅணிந்திடுவுத்தமம்
நீதியாயோகநிலையினில்நின்றிடு
சாதித்துமூலத்தனலையெழுப்பிடே ௭௭௫

எழுப்பிடுஞ்சேசகபிரண்டநாதன்மேலே
குழிப்பதில்பூரகஞ்சுருக்கத்திலென்றதை
செழிப்புடல்கண்டத்திற்சேருஅங்கென்றதீ
வழிப்படும்வாசல்வசாய்த்திறக்குமே ௭௭௬

திறந்திடுநிலையிற்சிக்கிரஞ்சிம்மென
நிறைந்திடுங்குபகம்நிறைந்தபதிதனில்
வரந்தருந்தியம்வானத்தின்றன்மேலே
சாந்திடும்வெளிபோல்காணுதுபார்த்திடே ௭௭௭

பார்த்திடுவெளியில்பரமபதிதனைக்
காத்திடும்போதில்கருவளர்வாசியை
சாத்திடும்யோகஞ்சதாநந்தபோதமாம்
புத்திருந்திடும்பூரணவாகமே. ௭௭௮

வாசம்நிறைந்தவளர்ஞானதேசியை
நேசமதாகநிலைதனில்காண
நேசமதெங்குஞ்செல்லினும்வருமோ
பாசமதாகப்பார்த்திடுங்குருவே ௭௭௯

குருவையறியக்கூடுமோமைந்தனே
கருவையறிந்துகாலதுகொண்டுநீ

திருவுருவாகிச்சிறந்தவறிவினால்
அருவளர்போதமண்டத்தில்கண்டிட்டே ௭௮௰

அண்டத்தில்பிண்டமடங்கியவாறும்
பிண்டத்திலண்டம்பேர்கொண்டவாறும்
கண்டத்தில்நின்றகாரணந்தன்னையே
விண்டவர்சற்குருவேதாந்திதானே ௭௮௧

நாலுணவிந்ததருவானபூரணம்
உணருகவந்தவுருவானகாரணம்
கோணமல்கண்டக்குறியையறிபவர்
தாணுனநாதல்தானவனாகுமே ௭௮௨

நாதமும்விந்தும்நடுநிலைதன்னிலே
நீதமாய்ச்சென்றுசேர்ந்துறவாகி
போதமாய்நின்றபொருளையறிபவர்
வேதமகன்றபெரியவராகுமே ௭௮௩

ஆகமிருந்தவந்தப்பதிதனில்
வேகமாயெழவும்விண்ணுருகிதன்னிலே
ஏகமாய்நின்றவின்பரசமதின்
பாகமறிந்தவர்பராபரமாமே ௭௮௪

மாத்திரையில்விந்துமணிகொண்டவாறும்
ஊத்திரையிலந்தவொளிகொண்டவாறும்
வாத்திரையிலெபற்றவரிசையறிபவர்
காத்திரையில்நெல்லிக்கனியென்னவாமே ௭௮௫

கனிக்குப்பலருகாரணமானதும்
மணிக்குநல்லொளியுமானமானதும்
அடுக்கொண்டபோதப் ஐயர்திருவடி
செனிக்கின்றமூலஞ்சேர்ந்தவர்குருவே ௭௮௬

குருவானதிட்சைக்குரியானவாறுந்
திருவானநந்திசெயமானவாறும்



பரிவானதேசிபரமானவாறுங்
கருவானமூலங்கண்டவர்முத்தரே ௭௮௭

முத்தானவுப்புமொழிவானபச்சையும்
வத்தாதவுப்புவழிவானசெய்கையுஞ்
சித்தானகாலத்தெளிவின்றநன்மையுஞ்
அத்தன்திருவுருவறிபவர்ஞானியே ௭௮௮

ஞானியமொன்றாந்நானென்றநன்மையும்
ஊனிநீர்மாய்ந்துழுடியதாரையும்
வாலுவில்கெற்சிதம்வழிவானபோதமும்
பேணியறிபவர்பேர்பெற்றநாதரே ௭௮௯

நாதமும்விந்துவுந்நடுவிலுறவாடி
போதமாய்நின்றபூரணகெற்பத்தில்
வாதம்பிறந்துவந்தவுர்கூறிய
பேதமையென்னப்பிதற்றுவார்சித்தரே ௭௯௰

பித்தஞ்செலுத்தும்போர்சித்தானதும்
உத்தமிலேற்பனமுறவானநன்மையும்
பெத்தமோர்வாதம்பேர்கொண்டசெய்கையும்
சத்தருமுன்னுஞ்சார்ந்தவர்முத்தரே ௭௯௧

முத்திக்கொழுந்தாடவினக்கின்றவித்துக்குத்
தித்துவமென்னதாதாரமென்ன
வித்துவுகித்தவித்தையறிபவர்
சத்தியஞ்சிவமூர்த்தானுருவாமே ௭௯௨

தானுனைசத்திதன்மயமானதும்
வானுப்பமேன்பரன்வழிவானருபமும்
கோணனைநாதன்றுணைவானசெய்கையும்
ஊனுணைதேசமுணர்ந்தவர்சித்தரே ௭௯௩

உகந்தோர்ராசனுன்கமையறிபவர்
அகந்தனில்புத்தஅருளானபூமலர்

ஜெகத்தனிற்கண்டுசொலறியவர்
சகத்தனில்தேசிகரறியாசியே ௭௯௪

வாசிபெற்றதாய் வாசியில்சென்றதாற்
தேசிகநாதன் திருவருவானதாய்
பூசனையாகிப்பொருளோரறியவர்
ஆசாபாசந்தனையறியாவதேசியே ௭௯௫

தேசியறிவாய் தேசிக்குறல்விடம்
வாசிபறியான்வழிவானகாயத்தை
பேசியநாதனைப்பெருமையறிபவர்
மாசில்லாதமனையறிவார்களே ௭௯௬

அறிவானகலையறியாதசித்தர்கள்
வெறியாகநின்றவர்தலையறியான்
குறியானகலைக்குணமானவனி
யப்பதியெந்தறிபவர்பூரணமாவரே ௭௯௭

பூரணமானபுத்திலவுப்புக்கு
காரணமானகருவையறிந்திலார்
சிருள்ளாறதியில்செவிப்பிறிகாலத்தில்
பூரணதேகம்புகழ்சென்றசித்தியே ௭௯௮

சித்திநிறைந்தசிவாடலிவகுரு
பித்தர்கள்போலேபெருமையாகத்தியே
யுத்தமமாகவுலகத்தோர்போலறியே
சுத்தாருசிறுவர்போல்சகமறிவாயனே ௭௯௯

ஆவாள்மவுனி அவரெல்லாம்கேவலியாவர்
தேவனென்றவனைத்தெரிக்கப்பரிக்கும்
பாவமகன்றிடும்பரிபூரணந்தாம்
கோவமகன்றிடுங்குருமொழிமுற்றுமே ௮௱

முத்தியென்றாமுமூக்கண்டமார்க்கம்
பத்தியுமுத்தியும்பாவித்தனினைக்கு



சித்தம்பெருகியஞானயோதமாய்
சுத்தமாய்நிபந்தலங்கியதறிவே ௮௱௧

அலங்குமென்றாறசடரொளிகண்டவர்
களங்கமகன்றகம்பூரணம்போல்
விளங்கியயோகம்விரும்பியமனமது
இலங்கியவாசியென்றாறமுற்றுமே ௮௱௨

முற்றுமென்றாற்றின்முறையயனையறி
முற்றுமென்றாற்றின்முக்கருவிக்கரு
முற்றுமென்றாற்றின்முடிவையறிந்தறி
முற்றுமென்றாறமுமூலமுமுற்றுமே ௮௱௩

---

மச்சமுனிசுவாமிகளருளிச்செய்த

திருமந்திரம்

முற்றிற்று.

1953

1953